பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 09 சனிக்கிழமை (24-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:363

# இலங்கை அரசுக்குச் சட்டவிரோதமாக பயங்கர ‘வக்யூம்’ குண்டுகள் விற்பனை

## பிரிட்டனின் ஆயுதத் தரகர்கள் மூலம்

கொழும்பு,நவ.24

பிரிட்டனிலிருந்து ஆயுதத் தரகர்கள் மூலம் சட்டவிரோதமாக ஆயிரம் ‘வக்யூம்’ குண்டுகள் இலங்கை அரசுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

- இவ்வாறு பிரிட்டனில் வெளியாகும் ‘த கார்டியன்’ பத்திரிகை தனது நேற்றைய பதிப்பில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜேமி வில்ஸன், பொப் க்ரூ ஆகியோர் இது பற்றி அந்தப் பத்திரிகையில் எழுதிய ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரிட்டனின் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி இவ்வகை ஆயுதங்கள் கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு விற்கப்பட்டிருக்கின்றன.

இவ்வகை ஆயுதங்கள் தோளில் வைத்துச் சுடக்கூடியவை. இவற்றிலிருந்து வெளியே சீறிப்பாயும் குண்டுகள் வெடித்துச் சிதறி உடல் உள்ளுறுப்புக்களை படுமோசமாகச் சேதப்படுத்துபவை.

கண்மணியைக் கூட கூட்டில் இருந்து பிய்த்துப் பறக்கச் செய்பவை. அவ்வளவு ஆபத்தானவை.

இந்த ரஷ்ய வடிவமைப்பு ஆயுதங்கள் பெருமளவில் சோவியத் யூனியனினால் ஆப்கானிஸ்தானில் முஜாகுதீன்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டன. மலைக் குகைகளுக்குள் ஊடுருவித் தாக்குவதற்கு இவை உபயோகிக்கப்பட்டன. 1999ஆம் ஆண்டு செச்சினியா, குரோஷ்னியிலும் ரஷ்யத் துருப்புக்கள் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தின.

**திடுக்கிடும் செய்தி**

மோசமான இந்த ஆயுதங்கள், சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்டவை. மனித உரிமை அமைப்புகளும் இவற்றைத் தடைசெய்யுமாறு வற்புறுத்தியிருந்தன.

சட்டவிரோதமாக இவ்வகை ஆயுதங்கள் விற்கப்பட்டதை பிரிட்டனின் ஜனநாயக மிதவாதக் கட்சியின் வெளிவிவகாரப் பேச்சாளர் மென்ஸிஸ் கம்பல் கண்டுபிடித்தார்.

இவற்றின் விற்பனை தொடர்பாக சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

(உ)

# தேர்தலில் இரத்தக் களரி

# வரும் பேராபத்து நிலை!

## ஆனமடுவவில் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,நவ.24

ஆனமடுவ கொட்டுக்கட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் தி.மு.தஸநாயக்காவின் ஆதரவாளர்களான மஞ்சுளா (வயது 25), தர்மசிறி (வயது 36) ஆகிய இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

முந்தல் பொலீஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். நாட்டில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நேற்றுக் காலையுடன் ஆயிரத்து 169 ஆக உயர்ந்துள்ளது.

## அமெரிக்க, பிரிட்டிஷ், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களைத் தலையிடக் கோருகிறார் ரணில்

கொழும்பு, நவம்பர்24

**இலங்கையின் பொதுத் தேர்தலில் இரத்த ஆறு ஓடக்கூடிய பேராபத்து நிலை ஏற்பட்டுள்ளது. அதனைத் தடுக்க உதவுங்கள்.**

**- இப்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ரொமானோ புரோடி ஆகியோரிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.**

ரோய்ட்டர் செய்தியொன்று இத்தகவலைத் தெரிவிக்கின்றது.

தேர்தலில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க எமது ஜனாதிபதி மீதும அரசின் மீதும் உங்களால் முடிந்த ஆகக்கூடியளவான இராஜதந்திர நிர்ப்பந்தங்களைத் தயவுசெய்து பிரயோகியுங்கள் என்று ரணில் தனது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி புஷ், பிரதமர் பிளே

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி வேட்பாளர் பட்டியலுக்கு எதிரான ஈ.பி.டி.பி. மனு தள்ளுபடி!

கொழும்பு,நவ.24

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் பாக்கியநாதன் இடம் பெற்றிருப்பதை ஆட்சேபித்து, அந்த வேட்பாளர் பட்டியலை நிராகரிக்கக் கோரி ஈ.பி.டி.பி. தாக்கல் செய்திருந்த மனுவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியது. நீதியரசர் காமினி அமரதுங்க இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

பாக்கியநாதன் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யாமல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரையும் ரணிலையும் தீர்த்துக்கட்ட அரசு சதி!

### திஸநாயக்கா திடுக்கிடும் தகவல்

கொழும்பு,நவ.24

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவையும் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் தீர்த்துக்கட்ட திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்ற திடுக்கிடும் தகவலை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா குறிப்பிட்டிருக்கின்றார்.

“கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன ‘சினைப்பர்’ துப்பாக்கி ஒன்று -99ஆம் ஆண்டு காணாமற்போனது, அது இப்பொழுது அமைச்சர் ஒருவரின் சட்டத்தரணியிடம் பணிபுரியும் முன்னாள் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் கையில் உள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் நேற்றிரவு சூடு!

நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் - ஊரடங்கு வேளை ‘ஹண்டர்’ வாகனம் ஒன்றில் அளவெட்டிப் பகுதிக்கு வந்த சுமார் 25 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று அங்கு ஐ.தே.கட்சியின் கொடிகளை அறுத்தும் சுவரொட்டிகளைக் கிழித்தும் அட்டகாசம் புரிந்ததாகவும் -

அதைத் தடுக்க முற்பட்ட அப்பகுதிப் பொதுமக்கள் மற்றும் தமது ஆதரவாளர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் -

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் முத்துத்தம்பி கனகசுந்தரம் இன்று அதிகாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

42-8142 இலக்க வாகனத்தில் வந்தோரே இந்தத் தாக்குதல் மற்றும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாகவும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல பகுதிகளிலும் இரண்டாவது நாளாக நேற்றும் பல்கலை. மாணவர் பிரசாரம்

யாழ்ப்பாணம்,நவ.24

பொதுத் தேர்தலில் குடாநாட்டில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் -

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எதிரான சக்திகளை எதிர்வரும் தேர்தலில் நிராகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் -

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அணியணியாகச் சென்று தமது பிரசார நட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்ட இளைஞன் பின்பு சடலமாக மீட்கப்பட்டார்

### மட்டு.மயிலங்கரச்சியில் சம்பவம்

மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பு மயிலங்கரச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை - 8.30 மணியளவில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் அடுத்தநாள் - நேற்றுக்காலை - ஓட்டமாவடி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை மாணவர் டக்ளஸிடம் முறைப்பாடு!

### ஈ.பி.டி.பி. கூறுகின்றது

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு தொகுதியினர் நேற்றுக் காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துத் தாம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர் என்று ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உள்வாரி மாணவர்களாகப் பயி

(14 ஆம் பக்கம் பார்க்க)



பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டம் 05-12-2001

நாடாளுமன்றத் தேர்தல் - ஐக்கிய தேசியக் கட்சி

தி.மகேஸ்வரன்
முன்னாள் பா.உ.
முதன்மை வேட்பாளர், யாழ்.மாவட்டம்
இல. 4

உங்கள் தார்மீக அஸ்திரம்
உங்கள் வாக்கு. அது பொன்னானது,
புனிதமானது.
தவறாது வாக்களியுங்கள்.

(93939)



ந.ராஜசூரியர்
கட்டடக் கலைஞர்
வேட்பாளர் இல. 05
யாழ்.மாவட்டம்

# ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே கைவிட்டு இப்போது அரசுக்கு வீணை வாசிக்கின்றனர்

## ஈ.பி.டி.பிக்கு ஆனந்தசங்கரி பதிலடி

யாழ்ப்பாணம்,நவ.24

"போராட்ட வீரர்கள் என்று கூறி எந்தக் காரணத்திற்காக ஆயுதம் ஏந்தினார்களோ, அந்த இலக்கை அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருந்துகொண்டு அரசுக்கு வீணை வாசிப்பதையே நான் கண்டிக்கிறேன்"

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான வீ.ஆனந்தசங்கரி.

"ஆயுதங்கள் ஏந்தியோரின் எண்ணம், சிந்தனை எல்லாம் குறுகிய சுய நலன்கள் எனும் எல்லை கடந்தவை; இது ஆனந்தசங்கரிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை" - என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான ஈ.பி.டி.பியின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விதண்டாவாதம் பேசும் ஈ.பி.டி.பி. குழுவினருக்கு எதைப் பேசுகிறோம், எதைச் செய்கிறோம் என்று தெரியாமல் ஆயுதங்களை ஏந்தியவர்களின் எண்ணம் சுயநல எல்லை கடந்தது என்று கூறியிருப்பது வேடிக்கையாக இருக்கின்றது. சந்திக்குச் சந்தி இவர்களுடைய ஆயுதக் குழுக்கள் இவர்களது முகாம்களில் இருப்பது பொதுமக்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை.

இவர்களுடைய ஆயுதக் குழுக்கள் குறிப்பாக தீவுப் பகுதியில் வாழும் மக்களை ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கி வைத்திருப்பது உலகமறிந்த உண்மை. விதண்டாவாதம் பேசுவதை விடுத்து தமது முகாம்களை மூடிவிட்டு மக்களை நிம்மதியாக வாழ விடுவதுதான் இன்று இவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய பெரும் கைங்கரியமாகும்.

இவர்களெல்லாம் தம்மை போராட்ட வீரர்கள் என்று கூறித்தான் ஆயுதம் தாங்கினார்களே தவிர அரசுக்கு வீணை வாசிப்பதற்காக அல்ல. எந்த நோக்கத்தோடு ஆயுதம் ஏந்தினார்களோ அந்த நோக்கத்திற்கு விரோதமாக நடப்பதைத்தான் நான் கண்டிக்கிறேன். எதற்கெடுத்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைதான் ஆயுதம் ஏந்தக் கூறினார்கள் என்று குறை கூறுவதை விடுத்து, மனச்சாட்சியின்படி இவர்கள் நடந்து கொள்வதே சிறந்த செயற்பாடாகும்.

எந்தக் காரணத்திற்காக இவர்கள் ஆயுதம் ஏந்தினார்களோ - அதற்கு மாறாக - அந்த இலக்கை அடைவதற்கு முட்டுக்கட்டையாக - இருந்துகொண்டு மக்களை மிரட்டி, மக்களின் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு இயங்கும் இக்குழு, மக்களுககு விடுதலை பெற்றுக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; மக்களை அடிமைப்படுத்தாவிட்டால் அதுவே பெரியகாரியம்.

நாடாளுமன்றப் பதவிக்கு ஆசைபடுபவன் நான் அல்லன்.

1983ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தொடர்ந்து வகித்திருக்கக்கூடிய போதிலும் - அதனை ராஜினாமாச் செய்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவன். இரு தடவைகள் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுபபினராக வரக்கூடிய வாய்ப்பையும் நிராகரித்தவன் நான். இவர்களைப் போல் பத்துத் தொகுதிகளில் 175 வாக்குகளை மட்டும் பெற்று சராசரி 18 வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்றவன் நான் அல்லன். எதிர் காலத்திலும் நான் அவ்வாறு செல்லப போவதும் இல்லை.

"தூங்குபவனை எழுப்பலாம் தூங்குபவனைப் போல் நடிப்பவனை எழுபப முடியாது"

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மூன்றரை வயதுச் சிறுமி மீது பாலியல் வன்முறைக் கொடூரம்!

## உடுவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.24

இளைஞர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மூன்றரை வயதேயான சிறுமி ஒருத்தி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

உடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

சிறுமியையும் அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்று பொருளகளை வாங்கிய தாயார், வழியில் தமக்கு நன்கு அறிமுகமான இளைஞர் ஒருவருடன் பிரஸ்தாப சிறுமியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருள்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினார். அப்போது அந்த இளைஞர் வீட்டில் தனிமையில் வைத்து சிறுமியை தகாத செயலில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதைத் தாயார் கண்டுள்ளார்.

தாயாரைக் கண்டதும் இளைஞர் அங்கிருந்து வேகமாக வெளியேறிச் சென்றுள்ளார்.

பின்னர் சிறுமியின் நிலையில் காணப்பட்ட மாற்றங்களை அடுத்து தாயார் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்.

சிறுமி மீது பாலியல் பலாத்காரம புரிந்த அந்த இளைஞர் சிறுமியின் உதடுகள், கன்னம் மற்றும் முகத்தில் பல இடங்களிலும் கடித்துக் காயங்களை ஏற்படுத்தியதாகக் கூறபபடுகிறது.

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து உடுவிலில் வசிக்கும் ஓர் இளைஞரே இச்செயலைப் புரிந்ததாக சிறுமியின் தாயார் தெரிவித்தார். (ஐ-15-86)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் எந்தக் கட்சிக்கும் ஆதரவில்லை!

## ஒன்றியம் அறிக்கை

எமது மாணவர்கள் எந்தக் கட்சிக்கும் ஆதரவாளர்கள் அல்லர் என்று யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கைக்கு பதில் அளிக்கும் விதத்தில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் சிலவற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இன்று எம்முன் எழுந்துள்ளது. கடந்த காலங்களில் மாணவர்கள் ஆயுதங்களை ஏந்த வேண்டிய தேவையை வரலாறு ஏற்படுத்தியது. அதேபோன்று இன்று எம் முன்னும் சில தேவைகள் எழுந்துள்ளன.

எமது மக்கள் ஒருபோதும் அடிமை வாழ்வை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சலுகைகளையும், நிவாரணத்தையும் பெற்றுக்கொள்வதற்காக எமது உரிமைகளையும் அதற்காக செங்குருதிச் சேற்றில் வீழ்ந்தவர்களின் தியாகங்களையும் விற்கமாட்டார்கள்.

இந்தச் செய்தியை சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கும் உலக வல்லாதிக்க சக்திகளுக்கும் உரத்துக கூற வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

இன்று எம்முன் இரு அணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒன்று சலுகைகளைக் கொண்டு மக்களை வாங்குவதற்கு முயற்சிக்கும் ஆயுதக் கூட்டம். மற்றையது எமக்கான உரிமைகளைப் பெறுவதற்காக களமுனையில் உள்ள அணி. இதில் முதலாவது அணி சிங்கள பேரினவாதத்தின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வெறும் சாவி கொடுத்த பொம்மை. இவர்கள் மீது எமக்கு தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆனால் இவர்கள் மூலம் பேரினவாதப் பேய்கள் முன்வைத்துள்ள 'கண்ணை விற்று சித்திரம் வாங்கும்' கொள்கைகள் பொதுமக்களால் முற்றாகத் தூக்கி எறியப்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். இதன்மூலம் முழு உலகிற்கும் நாம் ஒரு செய்தியைக் கூறவேண்டும்.

அதாவது நிவாரணங்கள் மூலம் எமது மக்களை வாங்கமுடியாது. உரிமைகளைக் கொடுப்பதன் மூலமே பிரச்சினைகள் தீர வழியேற்படும். எனவே உரிமைகளுக்காகப் போராடுபவர்களே மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகவேண்டிய தேவையை பேரின்வாதிகளுக்கும் உலகிற்கும் எடுத்துக்கூற வேண்டியது அவசியம். அதே சமயம், உரிமைகளும் வேண்டாம்; மண் மீட்பும் வேண்டாம்; இங்கே இருப்பது அந்நிய இராணுவம் அல்ல; சோறே போதும்; சுதந்திரமே தேவை இல்லை எனக் கூறிக்கொண்டவர்கள் தூக்கியெறியப்பட்ட வரலாற்றை உருவாக்குவோம். மாணவர் சக்தி தோற்றதாக வரலாறு இல்லை - என்றுள்ளது. (ம)

## புகைப்படங்களுடன் கூடிய நூலை வெளியிட்டு

# மூத்த கலைஞர்களின் சேவைகளை அறிந்துகொள்ள எதிர்காலச் சந்ததியினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும்

## நல்லூரில் நடந்த கௌரவிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்ப்பாணத்தின் மூத்த கலைஞர்களின் கலைச் சேவைகளையும் அவர்களது புகைப்படங்களையும் உள்ளடக்கிய நூல் ஒன்றை வெளியிடுவதன் மூலம் எதிர்காலச் சந்ததியினரும் அந்தக் கலைஞர்களை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

- இவ்வாறு கூறினார் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற மூத்த கலைஞர் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

எத்தனையோ அரங்குகளைக் கண்டு, எத்தனையோ ரசிகர்களை மகிழ்வித்தவர்கள் அனைவரும் இன்று ஒரே தினத்தில் - ஒரே மேடையில் கௌரவம் பெறுவது மகிழ்ச்சிக்குரியது.

தாங்களே மரம் நட்டு, தாங்களே பந்தல், மேடை என்பவற்றை அமைத்து விடிய விடிய நாடகம், கூத்து என்பவற்றை நடித்துக்காட்டி எமது கலைஞர்களை வளர்ப்பதற்கு பாடுபட்ட இந்தக் கலைஞர்களை மக்கள் ஒருபோதுமே மறக்கமாட்டார்கள்.

இந்தக் கலைச் செல்வங்களைக் கௌரவித்துப் பட்டம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இவ்வாறான கலைஞர்களை வருடந்தோறும் கௌரவிப்பதன் மூலம் அவர்களின் கலைச்சேவையை மேலும் உற்சாகப்படுத்தி வளர்க்க முடியும். அது மட்டுமன்றி இதன் மூலம் எதிர்காலக் கலைஞர்களும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

தள்ளாடும் வயதிலும்கூட தமது கலைப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துவரும் இந்தக் கலைஞர்கள் மறைந்தாலும் அவர்களது கலை வரலாறுகள் மறையாத வண்ணம் இருப்பதற்கும் அந்த வரலாறுகள் தொடர்பாக ஆய்வு செய்கின்ற இளஞ் சந்ததியினருக்கு ஆதாரமாக இருப்பதற்குமாக இவர்கள் தொடர்பான நூல் ஒன்றினை வெளியிடுவதற்கு கலை ஆர்வமுள்ள அனைவரும் முன் வந்து செயலாற்றவேண்டும் - என்றார்.

### துணைவேந்தர் உரை

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்:-

இலைமறை காய்களாக இருந்து கொண்டு இந்தக் கலைஞர்கள் ஆற்றிய கலைப்பணி என்றைக்குமே மறக்க முடியாததாகும்.

இவர்களைப்போலவே இன்னும் பல மூத்த கலைஞர்கள் கலைப் பணிசெய்து வருகின்றனர். அவர்களையும் இனங்கண்டு கௌரவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைகளை வளர்ப்பதற்கு கடந்த பல வருடங்களாக அரிய பல வேலைத் திட்டங்களை நடை முறைப படுத்தி வருகிறது.

இசை, நடனம், ஓவியம், நாடகம் ஆகிய நுண்கலைகளை தனித்தனியான பட்டப்படிப்புகளாகக் கற்பிக்கின்ற கல்வி நிறுவனம் யாழ்.பல்கலைக்கழகமே.

இத்தகைய சிறப்பு இந்தியாவில் கூட இல்லை. மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண் கலைக் கழகத்தில் பல கலைஞர்கள் இருந்து கலைகளை வளர்த்து வருகின்றனர்.

முன்னைய காலத்தில் தமிழ் மொழி மூலம் கலைத்துறையில் கற்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில மட்டுமே சுமார் 2 ஆயிரத்து 500 பேர் தமிழ் மொழி மூலம் கலைத் துறையில் கல்வி கற்கின்றனர்.

இந்த மூத்த கலைஞர்களின் கலைத்திறனைப் பேணிப்பாதுகாத்து வளர்ப்பது இளைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும் - என றார்.

இந்த நிகழ்வில் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர்.ஏ.டபிள்யூ அரியநாயகம், கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர். (க-4)

# டக்ளஸின் கேள்வி - பதில் மீண்டும் வானொலி ஊடாக

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.குடாநாட்டு மக்களின் கேள்விகளுக்கு வானொலி மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகப் பதில் அளிக்கும் நிகழ்ச்சி, மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் ஒரு தடவை ஏற்பாடுசெய்யப்பட்டிருபபதாக ஈ.பி.டி.பி. அறிவித்திருக்கின்றது.

கடந்த 18 ஆம் திகதி இலங்கை வானொலியின் வானம்பாடி சேவையில் ஒலிபரப்பியது போன்ற நிகழ்ச்சி மீண்டும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நடைபெறுமென ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

தொலைபேசி இலக்கம் 3722 மற்றும 3723 ஊடாக மக்கள் தமது கேள்விகளைக் கேட்கலாம் என்றும் -

மேற்படி நேரத்தில் இந்த இலக்கங்களுக்கு எடுக்கப்படும் தொலைபேசி அழைப்பிற்குரிய கட்டணம், இநத இரு இலக்கங்களின் கணக்கில் சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடுகள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன என்றும் -

ஈ.பி.டி.பி. மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## தேர்தல் ஆணையாளரிடம்

# மகேஸ்வரனுக்கு எதிராக தேவானந்தா முறைப்பாடு

யாழ்.மாவட்டத்தில் ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் தி.மகேஸ்வரன், வாக்காளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை மிரட்டி அச்சுறுத்தும் வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் செய்திக்குறிப்பு ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

அடுத்துவரும் தமது கட்சியின் ஆட்சியில் அரச ஊழியர்கள் பழிவாங்கலுக்கு இலக்காவர் எனும் சாரப்பட அவர் பேசிவருகிறார். தற்காலிக ஊழியர்கள் இடமாற்றத்துக்கு உள்ளாகலாம் எனவும், தண்டனை இடமாற்றங்களுக்கு உள்ளாகலாம் எனவும் மகேஸ்வரன் கூறியுள்ளார். இது அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கூட மறுக்கும் செயல்.

- இப்படி டக்ளஸ் தேவானந்தா தேர்தல் ஆணையாளருக்கு சுட்டிக் காட்டியிருப்பதாக அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது. (உ)


**பொதுத்தேர்தல் — 2001**

**ஐக்கிய தேசியக் கட்சியின் 19 ஆவது கொள்கை விளக்கமும் பிரசாரக் கூட்டமும்**

✪ இன்று பிற்பகல் 2.30 மணிக்கு - நாவாந்துறை சந்தை

✪ இன்று மாலை 5.00 மணிக்கு - இருபாலைச் சந்தி

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர்

**திரு.தி. மகேஸ்வரன்**

(யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

சிறப்புரையாற்றுவார்

*ஐக்கிய தேசியக் கட்சி,*
*யாழ். மாவட்டம*

(C-19429)

### சரணடைய இணங்கியபோதும்

# குண்டூஸில் உள்ள தலிபான்கள் மீது வடக்குக் கூட்டணியினர் தாக்குதல்!

காபூல்,நவ.24

ஆப்கானிஸ்தானில் முற்றுகையிடப்பட்ட குண்டூஸ் நகர்மீது வடக்குக் கூட்டணிப் படைகள் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டூஸ் நகருக்குள் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான தலிபான் வீரர்களை பேச்சு மூலம் சரணடையச் செய்து, அந்த நகரைக் கைப்பற்ற முயற்சித்ததாகவும் -

சரணடைய பெரும்பாலான தலிபான்கள் சம்மதித்தபோதும், தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமரின் அறைகூவலை அடுத்து, சரணடையும் எண்ணத்தை அவர்கள் கைவிட்டதாகவும் -

அதனாலேயே இராணுவத் தீர்வு காணவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் -

வடக்குக் கூட்டணியின் உள்துறை அமைச்சர் நூருஸ் இமாம் தெரிவித்தார்.

முன்னதாக விமானக் குண்டுவீச்சையும், தரைப்படைத் தாக்குதலையும், நிறுத்திவைத்து, தலிபான்களைச் சரணடைய வைப்பதற்காக, வடக்குக் கூட்டணித் தளபதி ஜெனரல் அப்துல் ரஷீத் தோஸ்தம், மஷார் ஏ ஷெரீப் நகரில் தலிபான் தளபதிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். அப்போது குண்டூஸ் நகரில் சிக்கியிருந்த தலிபான்கள் சரணடைய இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால் குண்டூஸில் சிக்கியுள்ள, பாகிஸ்தானிய, செச்சினிய, அரேபியப் போராளிகள் அடங்கிய தலிபான் படையினர் இறுதி நேரத்தில் தமது மனதை மாற்றிக்கொண்டு, சாகும் வரை போராடப்போவதாக அறிவித்ததாக வடக்குக் கூட்டணி கூறுகிறது.

ஆனால், தலிபான்கள் சரணடையத் தயாராக உள்ளபோதும், வேண்டும் என்றே வடக்குக் கூட்டணிப் படையினர் தாக்குதலைத் தொடுத்துள்ளதாக பாகிஸ்தானியச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே, குண்டூஸ், கந்தகார், பாஹியா ஆகிய நகரங்களைச் சுற்றிலிலுமுள்ள தலிபான் இலக்குகள் மீது, அமெரிக்க விமானங்கள் நேற்று முதல் குண்டுவீசித் தாக்கி வருகின்றன. (ஒ-10)

## புதிய தலைவரை நியமித்துவிட்டு முல்லா முஹமட் ஒமர் தலைமறைவு!

லண்டன்,நவ.24

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஒமர் தலைமறைவாகிவிட்டதாக சுயாதீன செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

தனது உதவியாளர் ஒருவரைத் தலிபான் மக்கள் படையின் தலைவராக ஒமர் நியமித்திருப்பதாகவும் -

தற்போது ஒமர் எங்கிருக்கிறார் என்பது தலிபான் தளபதிகளுக்கே தெரியாதுள்ளதாகவும் - அவை தெரிவித்தன.

தலிபான்களின் முக்கிய தளபதிகளில் ஒருவரான முல்லா சையத் முஹமது மக்கானி பாகிஸ்தானின் சாமன் நகரில் வைத்து இதனைக் கூறியுள்ளார்.

கந்தகாரில் உள்ள முல்லா முகமட் ஒமரின் வீட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் -

ஒமரின் பொறுப்புகளை புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் முல்லா அக்தர் முஹமது உஸ்மானி ஏற்றுள்ளதாகவும் - மக்கானி தெரிவித்தார். (ஒ-ரி)

## அதிபர் முஷாரப் கோரிக்கை

இஸ்லாமாபாத்,நவ.24

குண்டூஸ் நகரில் சிக்கியுள்ள பாகிஸ்தானியப் போராளிகளை பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்குமாறு பாகிஸ்தான அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப், அமெரிக்க அதிபர் புஷ்ஷிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது தொடர்பாக முஷாரப் அமெரிக்க அதிபருக்கு அவசரச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

குண்டூஸ் நகரில் வடக்குக் கூட்டணியின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள தலிபான்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தானியர்கள் என்றும் -

அவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறி, பாகிஸ்தானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ செல்ல அமெரிக்கா உதவவேண்டும் என்றும - தனது செய்தியில் முஷாரப் கோரி உள்ளார். (ஒ-ரி)



யுத்தம் மூண்ட குண்டூஸ் நகரில் இருந்து வெளியேறி வெட்ட வெளியில் தங்கியுள்ள ஆப்கான் அகதிக் குடும்பம் ஒன்று தீ மூட்டிக் குளிர் காயும் காட்சி. ஆப்கானிஸ்தானில் தற்போது கடும் குளிர் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## 'சார்க்' மாநாடு அடுத்த வருடம் நேபாளத்தில்

காத்மண்டு,நவ.24

11ஆவது 'சார்க்' உச்சிமாநாடு அடுத்த வருடம் ஜனவரி மாதம் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறவுள்ளது.

ஜனவரி 4ஆம் திகதி முதல் 3 நாள்கள் நடக்கும் 'சார்க்' மாநாட்டில் வாஜ்பாய், முஷாரப் உட்பட 7 அங்கத்துவ நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்வார்கள்.

## பீஹாரில் ரயில் விபத்து!

பாட்னா,நவ.22

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் இரண்டு ரயில்கள் மோதிக் கொண்டதில் 13 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு முகாம நகரிலிருந்து சென்று கொண்டிருந்த ரயில் என்ஜின் ஒன்று, எதிர்த் திசையில், அதே தண்டவாளத்தில் வந்து கொண்டிருந்த பயணிகள் ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

# பலஸ்தீனத் தனிநாடு அமைக்க ஆதரவு தேடுகிறார் அதிபர் புஷ்!

அம்மான்,நவ.24



அயல் நாடான இஸ்ரேலுடன் சமாதானமாக வாழக்கூடிய - சுயாதீனமான - பலஸ்தீன நாடொன்றை அமைப்பதற்கு அரபு நாடுகளின் ஆதரவை அமெரிக்க அதிபர் புஷ் நாடியுள்ளார்.

மேற்காசியாவை பல ஆண்டுகளாக இரத்தக் களரியாக்கிவரும் இஸ்ரேல் - பலஸ்தீன மோதலுக்கு முடிவு கட்டப்படவேண்டும் என்று அமெரிக்க அதிபர் வேண்டுகோள் விடுத்திருப்பதாக ஜோர்டானிய மன்னர் மாளிகைப் பேச்சாளர் நேற்றுத் தெரிவித்தார்.

அமைதித் திட்டத்தில் நிலவும் தேக்க நிலையை அகற்றவும், உடனடி யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவுமென இரண்டு அமெரிக்கத் தூதர்கள் மேற்காசியப் பிரதேசத்துக்கு அனுப்பப்படவுள்ளதாக அதிபர் புஷ் ஜோர்டான் மன்னருக்குத் தெரிவித்திருப்பதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இதனிடையே, காஸா நிலப் பிரதேசத்தில், பலஸ்தீனப் பாடசாலைச் சிறுவர்கள் ஐவர் உயிரிழந்ததற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று பலஸ்தீன நிர்வாகம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஒ-ரி)

### உலக அரங்கில்

## சர்வதேச கிரிக்கெட் சபையுடன் இந்தியா, தென்னாபிரிக்கா முறுகல்

லண்டன்,நவ.24

இந்திய, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையே நேற்று தென்னாபிரிக்காவின் ஜோஹன்ஸ்பேர்க்கில் ஆரம்பமான மூன்றாவது 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியை சர்வதேசப்போட்டியாக அங்கீகரிக்கப் போவதில்லை என்று சர்வதேச கிரிக்கெட் சபை கூறிவிட்டது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையே நடந்த இரண்டாவது 'டெஸ்ட்' போட்டியில் போட்டி நடுவராக இருந்த மைக டெனிஸ் இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கை காரணமாக, சர்வதேச கிரிக்கெட் சபை டெண்டுல்கார், கங்குலி உட்பட 6இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு தண்டனை விதித்திருந்தது.

இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து, தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மூன்றாவது 'டெஸ்ட்' போட்டிக்கு நடுவராக மைக் டெனிஸுக்குப் பதிலாக டெனிஸ் லின்ஸ் என்பவரை நியமித்துள்ளது.

ஆனால் இந்த முடிவை சர்வதேச கிரிக்கெட் சபை ஏற்கவில்லை. மைக் டெனிஸ் போட்டி நடுவராக இல்லாத போட்டியை அங்கீகரிக்கமுடியாதென்றும் - இந்திய வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் நீக்கப்படமாட்டா என்றும் - சர்வதேச கிரிக்கெட் சபை கூறியுள்ளது. (ஒ-10)

# சட்டவிரோதக் குடியேறிகள் இருந்த ஆஸ்திரேலிய அகதிமுகாம் தீக்கிரை!

கன்பரா,நவ.24

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரியவர்கள் தங்கியிருந்த அகதிகள் முகாம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீக்கிரையாக்கப்பட்டது.

தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள 'ஷமெரா' அகதிகள் தடுப்புமுகாமின் கட்டடங்களே தீயினால் சேதமுற்றவையாகும். சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்த, மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர், இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

முகாமில் இருந்தவர்களே கட்டடங்களுக்குத் தீ மூட்டியதாகவும் -

இதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் -

ஆஸ்திரேலியக் குடிவரவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள், ரமழான் நோன்பு உணவைத் தயாரித்தபோது, எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதலில் வெளியான செய்திகளை அமைச்சர் நிராகரித்தார்.

உலகில் மிகக் கடுமையான குடியேற்ற விதிகளைக் கொண்டுள்ள நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று. இங்கு சட்டவிரோதமாக நுழைபவர்கள் மீது நடைபெறும் விசாரணைகள் முடியும்வரை அவர்கள் சிறை போன்ற தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இவர்கள் மீதான விசாரணை முடிவடைய இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இதனால் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்படும் சட்டவிரோத குடியேறிகள் விரக்தியுற்று கலகங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

கடந்தவாரம் 'ஷமெரா' முகாமிலிருந்து 6 பேர் மின்சார வேலிகளைப் பிரித்து தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பிரிட்டிஷ் அமைச்சர் பாக். சென்றார்

லண்டன்,நவ.24

ஆப்கானிஸ்தானில் விரிவான அரசொன்றை அமைப்பது தொடர்பாக ஐ.நா. மற்றும் பாகிஸ்தானிய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதற்காக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ நேற்று இஸ்லாமாபாத் போய்ச் சேர்ந்தார்.

## அகதிகள் நுழைவதைத் தடுக்க ஐரோப்பிய எல்லைப்படை

பிராஸல்ஸ்,நவ.24

ஐரோப்பிய நாடுகளுக்குள் தஞ்சம்கோரி நுழைபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த எல்லைப்படையொன்றை சேவையிலீடுபடுத்துமாறு ஐரோப்பிய ஆணைக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் நுழைவைத் தடுக்கும் வகையில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்ட பொதுவான எல்லைப்படையை ஐரோப்பிய நாடுகள் இணைத்து அமைக்கவேண்டும் என்றும் -

திறமையாகச் செயற்படுவதற்காக அந்த எல்லைப்படைக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் -

ஐரோப்பிய நாடுகளின் பொலீஸ் நிறுவனத்திடம் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆயினும், இந்த யோசனையை சில ஐரோப்பிய நாடுகள் - இறைமையைப் பாதிக்கும் என்று கருதி - நிராகரிக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. (ஒ)

## வீரப்பனுக்கு உதவியதாக கன்னியாஸ்திரி கைது!

சென்னை,நவ.24

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனின் ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பேரில் கிறிஸ்தவக் கன்னியாஸ்திரி ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக தமிழகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் கள்ளச்சாரயக் கடத்தலைத் தடுப்பதற்காக வாகனச் சோதனைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார், வீரப்பனைப் புகழ்ந்தும், அவரைக் கைது செய்யும் தமிழக அரசின் முயற்சிகளைக் கண்டித்தும் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களைக் கார் ஒன்றில் கண்டுபிடித்துள்ளனர். அந்தத் துண்டுப்பிரசுரங்களைக் காரில் எடுத்துவந்த கன்னியாஸ்திரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் இன உணர்வு அமைப்பொன்றின் சார்பில் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வீரப்பனுக்கு மின்னியல் சாதனங்களைக் கொடுத்து உதவியதாகச் செய்தியாளர் ஒருவரை கர்நாடகப் பொலீஸார் சமீபத்தில் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-ரி)

## ராஜீவ் காங்கிரஸ் தாய்க்கட்சியில் இணைகிறது

சென்னை,நவ.24

தமிழக ராஜீவ் காங்கிரஸ் தனது தாய்க்கட்சியான அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் இணையவுள்ளது.

த.ரா.கா. தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் சென்னையில் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த மாத இறுதியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் இணைப்பு விழா நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழக மருத்துவமனையில்

## கத்தரிக்கோலை உடலுக்குள் வைத்துத் தைத்த மருத்துவர்

சத்திரசிகிச்சையின் போது சிகிச்சை உபகரணம் நோயாளியின் உடலினுள் வைத்துத் தைக்கப்பட்ட சம்பவம் தமிழகத்தில் சமீபத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்தவாரம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளி ஒருவருக்கு வயிற்றுப் பகுதியில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சையின் பின்னர் வார்ட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த நோயாளிக்கு திடீரென்று உள் வயிற்றில் வலி தோன்றியது.

இதனையடுத்து நோயாளியைப் பரிசோதித்த மருத்துவர்கள், சத்திரசிகிச்சையின்போது தவறுதலாக சிறிய உபகரணம் ஒன்று வயிற்றினுள் வைத்துத் தைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். உடனடியாக அந்தநோயாளி மீண்டும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வயிற்றினுள் இருந்த உபகரணம் அகற்றப்பட்டது.

இது தொடர்பாக மருத்துவர் ஒருவரும் ஒரு தாதியும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ஒ-10)

# யுத்தத்தை நிறுத்தக் கோரி 5 ஆயிரம் விதவைகள் ஒப்பம்!

## தென்னிலங்கைப் பெண்கள் இங்கு கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம், நவ. 24

குடாநாட்டில் வசிக்கும் கணவன்மாரை இழந்த சுமார் 5 ஆயிரம் பெண்கள் யுத்தத்தைஉடனடியாக நிறுத்துமாறு இரு தரப்பினரையும் வலியுறுத்தி கையொப்பமிட்டுள்ளனர்.

தென் பகுதியில் இருந்து இங்கு வருகைதந்த யுத்தத்தால் கணவன்மாரை இழந்த பெண்களின் அமைப்பைச் சேர்ந்த 6 பெரும்பான்மையினப் பெண்கள் இந்தக் கையொப்பங்களை இங்கு திரட்டியுள்ளனர்.

இவர்கள், ஊர்காவற்றுறை, இளவாலை, தெல்லிப்பழை, உட்பட யாழ். நகரப் பகுதியிலும் யுத்தத்தால் கணவன்மாரை இழந்த பெண்களைச் சந்தித்து இந்தக் கையொப்பங்களைச் சேகரித்துள்ளனர்.

கியூடெக் நிறுவனத்தின் ஆதரவுடன் குடாநாட்டில் இந்த கையெழுத்து வேட்டையில் ஈடுபட்ட இவர்களிடம் குடாநாட்டு நிலைவரம் தொடர்பாக கருத்துக்கேட்டபோது—

யாழ்ப்பாணத்திற்கு வந்த பிறகே இங்கு வாழும் பெண்கள் உட்பட அனைவரும் திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாழுகின்றார்கள் என்பதை உணர்கிறோம்.

யுத்தத்தில் கணவன்மாரை இழந்த நிலையில் இங்கு வசிக்கும் பெண்கள் பல துன்ப துயரங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் கண்கூடாகக் கண்டோம்.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் உடனடியாக யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதே அனைவரது ஆவலாகவும் உள்ளது— என்றனர்.

இன்று இவர்கள் கொழும்பு திரும்புவர். (ஐ–6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 24

தீவகக் கல்விவலயம் வலய மட்டத்தில் நடத்திய பண்ணிசைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்கொண்டல் ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் ந. ஜெகநாதன், வேலணை கிழக்கு மகா வித்தியாலய அதிபர் ந. பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ம-7)

# யாழ்.ஆஸ்பத்திரிடாக்டர்களுக்கு நேற்று பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.24

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து, யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களின் வாகனங்களுக்கு நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் வழங்கப்பட்டது.

வைத்தியர்களின் பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள்களுக்கு 5 லீற்றர் பெற்றோலும், கார்களுக்கு 8 லீற்றர் பெற்றோலும் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் முடிந்துள்ள நிலையில் தமது வாகனங்களுக்கு பெற்றோல் இல்லாததால் வைத்தியர்கள் பலர் கடந்த சில தினங்களாக சைக்கிள்களிலேயே கடமைக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (ஐ-6–139)

# ஜி. சீ. ஈ. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 24

டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான அட்டைகள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அட்டைகள் யாவும் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் —

யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10–ரி)

## கல்வியியற் கல்லூரிகளுக்கான

# நேர்முகப் பரீட்சைத் திகதிகள் மீண்டும் மாற்றப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ. 24

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கான திகதி மீண்டும் மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் என வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி செ. அழகரெத்தினம் நேற்று அறிவித்துள்ளார்.

இதன்படி 26 ஆம், 27ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் 30 ஆம் திகதியும் 28ஆம் திகதி அழைக்கப்பட்டவர்கள் அன்றைய தினமும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கலாம் என்றும்—

ஏனையவர்களுக்கு அழைக்கப்பட்ட அதே தினங்களில் நேர்முகப் பரீட்சை இடம் பெறும் என்றும்—

அவர் அறிவித்துள்ளார். (ம-7)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 24

அரசசேவை கீழ் உழைப்பு பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம–7)

## மானிப்பாயில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 24

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் கல்விசார் சேவைத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் கோட்டத்தில் 2001ஆம் ஆண்டில் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கானபாராட்டு விழா வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் பிராந்தியம் – 9இன் தலைவர் லயன் ஆர். நடராஜாவும். சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் ஏ. நல்லதம்பி, வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் றெஜினா இநநயநாதன், சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கம் ஆகியோரும் கௌரவ பேச்சாளராக டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியனும் கலந்து சிறப்பிப்பார்கள். (க-ரி)

## உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சமூகத் தொண்டர் ஹன்ஸ் பீற்றர் டென்லர் இங்குள்ள ஊனமுற்றவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை வழங்கிய அதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இது போன்ற உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சிறு பிள்ளைகளுக்கான சக்கர நாற்காலி உட்பட ஊனமுற்றவர்களுக்கு இயன் மருத்துவ முறையில் பயிற்சி அளிக்கக்கூடிய நவீன ரக பெறுமதிமிக்க உபகரணங்கள் சிலவற்றையும் வழங்கியுள்ளார். (க-15)

# குடாநாட்டு நெற்பயிர்களில் இலைச்சுருட்டி நோய்த் தாக்கம்

## விவசாயிகளை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்டத்தில் தற்போது நெற்பயிர்களில் இலைச்சுருட்டி அல்லது இலை மடித்துக்கட்டி நோயின் தாக்கம் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டிருப்பதாக உதவி விவசாயப் பணிப்பாளர் க. சின்னத்துரை அறிவித்துள்ளார்.

எனவே விவசாயிகள் தமது நெற்பயிர்களைக் கூர்ந்து அவதானிக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய காலநிலை இந்தப் பீடையின் பெருக்கத்துக்குச் சாதகமாக இருப்பதுடன் தாக்கப்பட்ட பயிர் இலைகள் நீளமாக சுருட்டப்பட்டு அல்லது இலைகள் மடிக்கப்பட்டு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பீடை, பயிரின் எல்லாப் பருவங்களிலும் தாக்கக் கூடியது.

தாக்கப்பட்ட இலையின் சுருளை அல்லது மடிப்பை விரித்துப் பார்க்கும்போது அவற்றினுள் பழுப்பு வெண்ணிறமான புளுவையோ அல்லது எச்சங்களையோ காண முடியும்.

இலைகளில் உள்ள பச்சையத்தை இப் புளுக்கள் உணவாக உட்கொள்வதனால் தாக்கப்பட்ட பயிர் இலையின் நுனிப்பகுதி வெள்ளை நிறமாகக் காணப்படும்.

இந்தத் தாக்கத்தைப் பயிரில் அவதானித்தால் உடன் குளேறேபறிபோஸ் அல்லது பென்தியோன் பூச்சிநாசினி மருந்தை எடுத்து 1 அவுன்ஸை 3 கலன் நீரில் கலந்து; ஒரு ஏக்கருக்கு 40 கலன் மருந்துக் கலவை என்ற ரீதியில் விசிறி இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

கிருமிநாசினி மருந்து விசிறிய பின்னர் 5 அல்லது 6 மணி நேரம் மழை பெய்யாது இருப்பதும் முக்கியமானது— என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை—

நெல் வயலில் நீர் தேங்கி இருக்கும் இடங்களில் கால் ஏக்கருக்கு 200 கிலோ கிராம் சீமைக்கிழுவை இலை அல்லது வெட்டிய எருக்கலை இலை அல்லது நொச்சி இலைகளை இடுவதால் இந்தத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் ஆலோசனை வளங்கியுள்ளார். (ம-180–10)

## யாழ்நகர் மைய ரோட்டறக் ஏற்பாட்டில்

# கொட்டடியில் நாளை பொது மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் நடத்தும் மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், நீரிழிவுப் பரிசோதனை, பூச்சி மருந்து வழங்கல் என்பன இடம் பெறும். இந்த மருத்துவ முகாமில் வைத்து யாழ். நகர மைய ரோட்டறக்கழக அங்கத்தவர்கள் கொட்டடிப் பகுதி மக்களுக்கு இலவசமாக உடுபுடவைகளையும் வழங்குவர்.

இந்த முகாமில் கண்பரிசோதனை நடத்தப்பட்டு, பார்வைக்குறைபாடு உடையவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

இதேவேளை —

யாழ். மாநகர சபைப் பகுதிகளில் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அண்மையில் கொட்டடிப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்கட்டமாக கொட்டடிப்பகுதியில் உள்ள பொதுக் கிணறுகளைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப் படவுள்ளன. இந்தத் திட்டத்தை யாழ். ரோட்டறிக் கழகம் பொறுப்பேற்றுள்ளது. இது தொடர்பான உறுதிக் கடிதத்தை கழகத்தின் உப தலைவர் ந. வன்னியசிங்கம், மருத்துவ மாணவன் தே. அரவிந்தன் ஆகியோர் அண்மையில் கொட்டடி கிராம அலுவலர் க. மகாலிங்கத்திடம் கையளித்தனர். (ம-7)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், நவ.24

திரைப்படவட்டமும், புறநிலைப் படிப்புகள் அலகும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் மைக்கல் ரெட்போட் இயக்கிய இத்தாலிய மொழித் திரைப்படமான தபால்காரன் (தபோஸ்மன்)படம் காண்பிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் திரைப்படக் காட்சியில் பங்குகொள்ளலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வருகின்ற தாச்சிப் போட்டியில் இன்று பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் கொண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும்—

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலையிலும் நடைபெறவுள்ளன,

யாழ். கல்வி வலய மட்டத்திலான இறுதிப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம–10)

## சைவச் சிறுவர் இல்லத்துக்கு புதிய அனுமதி

வலிகாமம் தெற்கு, நவ. 24

யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் சைவச் சிறுவர் இல்லத்துக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்,

நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து அனுமதி பெற்ற சிறார்களின் பெற்றோர்களை அல்லது பாதுகாவலர்களை அன்றைய தினம் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் சிறார்களுடன் வருகை தருமாறு சங்கத்தின் செயலாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கேட்டுள்ளார்.

2000ஆம், 2001 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்டவர்களும் அனுமதிக்கப் படவுள்ளனர். (க-152)

## கலாமாலை

குருநகர், நவ. 24

யாழ். பிரதேச கலாசார பேரவையின் கலாமாலை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ். பிரதேச கலாசாரப் பேரவைத்தலைவர், யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும். (ம–51)

உதயன்

## வன்னி மக்களுக்காக வெட்டிக் கிழித்தது என்ன?

பொதுத்தேர்தலை ஒட்டி யாழ். குடாநாட்டில் கட்சிகள், பொது அமைப்புகள் இடையே அறிக்கைப் போர் சூடாக நடந்துகொண்டிருக்கின்றது - பத்திரிகைகள் களத்தில். கருத்துக் குண்டுகள் மாறி மாறி உமிழப்படுகின்றன. வாசித்துச் சலித்துப்போய் நிற்கின்றார்கள் மக்கள்.

வீதியோரத்திலும், பிரசார கூட்டங்களிலும் சுவரொட்டிகளை கிழுத்துக் கிழித்து, கல்லால் மண்டையை உடைத்து, 'வாகனங்களை அடித்துநொறுக்கி', 'பனர்'களை தீயிட்டுக் கொளுத்தி, துப்பாக்கியால் மிரட்டி நேரடியாகக் களத்தில் மோதுவதை விட, கருத்தினால் மோதிக்கொள்வது ஆயிரம் மடங்கு வரவேற்கத்தக்கது என்பது மக்கள் எண்ணம்.

இந்தக் கருத்து மோதல்களில் இன்று முக்கிய இடத்தைப் பெற்றிருப்பது -

'மண் மீட்பா? மக்களின் வாழ்க்கையா?'; 'உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வா? அன்றாடப் பிரச்சினைக்கு அவ்வப்போது தீர்வா?' - என்ற விடயம்தான்.

இது விவகாரமான விடயம் என்றாலும் விவாதிக்கவேண்டிய விடயம்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த சர்ச்சைகளின் பின்னணியில் வன்னி நிலைமை குறித்து கிளிநொச்சிப் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் கூறியுள்ள - மனதை நெருடும் - தகவல்களை கவனிப்பதும் கட்டாயமானதாகின்றது.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் அநேகமான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதில்லை; போக்குவரத்து அன்றாடப் பிரச்சினையாகி விட்டது; எரிபொருளுக்கும், வாகன உதிரிப்பாகங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு; போஷாக்கு உணவின்றி கர்ப்பிணித் தாய்மாரும், குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்; சிசுக்கள் இறக்கின்றனர்; கல்வி நிலைமை மிக மிக மோசம்.... இப்படி நீடித்துச் செல்கின்றது வன்னி மக்களின் அவல வாழ்வு பற்றிய பட்டியல்.

குடாநாட்டை படையினர் கைப்பற்றியது குடாநாட்டு மக்களின் செயற்பாட்டினாலோ அல்லது வன்னியை விடுதலைப் புலிகள் தக்கவைத்திருப்பது வன்னி மக்களின் நடவடிக்கையினாலோ அல்ல.

படையினரதும் விடுதலைப் புலிகளினதும் இராணுவ வலிமைகள் சம்பந்தப்பட்ட விவகாரம் அது. அதில் வன்னி மக்களோ, யாழ். குடாநாட்டு மக்களோ நேரடியாகச் சம்பந்தப்படவில்லை.

எனவே 'மண் மீட்பா? மக்களின் வாழ்க்கையா?' என்ற கேள்வி, வாக்களிக்கும் வாய்ப்புப் பெற்ற - அரசியல்வாதிகளின் பதவி ஆசைக்குத் தீனிபோடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ள - குடாநாட்டு மக்களுக்கு மட்டும் உரியதல்ல. எங்களின் உயிரின் உயிராக, இரத்தத்தின் இரத்தமாக உள்ள வன்னி உறவுகளுக்கும் உரிய பிரச்சினை அது.

தெளிவாகக் கூறப்போனால் வாழ்க்கை - உயிர் இருப்பு - என்பது, குடாநாட்டு மக்களைவிட வன்னி மக்களுக்குத்தான் மிக மோசமானதாக - மிக கஷ்டமானதாக உள்ளது.

"வாழ்க்கையை நேசித்து எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் வாழ மக்கள் விரும்புவதைத் தவறு என்று எவரும் கூறமுடியாது" - என்று குறிப்பிட விரும்புபவர்கள் -

வன்னி மக்களுக்கும் சேர்த்தான விடயங்களுக்குப் பொறுப்பான பதவிகளை ஏற்றோர் -

அடுத்த தேர்தலுக்கான வாக்குகளை இலக்கு வைப்பதைவிட - மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே வந்த 'அவதாரங்கள்' போல தங்களைக் காட்டிக்கொள்வோர் -

- தேர்தல் நெருங்கும் போது வாரி இறைப்பவர்கள் -

- தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள் என்று அள்ளி வந்து கொடையளிப்பவர்கள் -

உயிர் வாழ்க்கை இருப்புக் கேள்விக்குள்ளாகியிருக்கும் எமது வன்னிச் சகோதரர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஏதேனும் செய்தார்களா என்பதை மக்களுக்கு அம்பலப்படுத்தினால் நல்லது.

வாக்களிக்கும் வாய்ப்பு இல்லாததால் வன்னி மக்களுக்கு அன்றாடப் பிரச்சினை இல்லை என்றோ அல்லது அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவேண்டிய அதிகாரப் பொறுப்பு தங்களிடம் இல்லை என்றோ சம்பந்தப்பட்டோர் கூற விரும்புகின்றார்களா?

மக்களுக்கு - வன்னி மக்களுக்கு - தெளிவுபடுத்தினால் நல்லது.

### ஆஸியில் வசிக்கும் பழைய மாணவர்கள்

## ஸ்கந்தா மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு நிதியுதவி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்க ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்கள் முன்வந்துள்ளனர்.

இந்த உதவித் திட்டத்தின் முதற் கட்டமாக தாய், தந்தையற்ற சுமார் 56 மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்திக்கென 50ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் -

இந்த நிதியைப் பயன்படுத்தி அப்பியாசப் புத்தகங்கள் முதலான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் -

கல்லூரி அதிபர் கே.சிவாஜி அறிவித்துள்ளார்.

இதேவேளை -

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று, ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஒவ்வொரு தவணையும் ஊக்குவிப்பு நிதியம் வழங்குவதற்கும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பழைய மாணவர்கள் முன்வந்துள்ளனர் என்றும் -

அண்மையில் ஆஸ்திரேலியா சென்றிருந்த கல்லூரியின் ஆசிரியர் ஆறு.திருமுருகன் இந்த உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவியுள்ளார் என்றும் - கல்லூரி அதிபர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## நாட்டு நடப்பு

**களவு - IX**

**வேழமுகத் துதித்த விக்ன விநாயகனே**
**நாளாந்தம் கள்வர் நடமாட்டத்தால் - பாழான**
**கொள்ளை அடிக்கும் கொலைகாரக் கும்பல் தனை**
**எள்ளளவும் தண்டிக்காத தேன்?**

*- விகடகவி.*

## ஹவாய் சுவாமிகளின் மறைவுக்கு இந்து சமயப் பேரவை அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்ப்பாணம் யோகர்சுவாமிகளின் சிஷ்யர்களுள் ஒருவரும் ஹவாய் சைவசித்தாந்த குரு பீடத்தின் குரு பீடாதிபதியுமான ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகள் சிவபதம் அடைந்தமை குறித்து யாழ்.இந்து சமயப் பேரவை அஞ்சலிச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

பேரவை சார்பாக அதன் செயலாளர் சி.சக்திகிரீவன் விடுத்துள்ள அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளின் சீடர்களிலொருவரும், அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வரும், சிவஞானியுமான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சிவபதம் அடைந்தமை உலகெங்கும் வாழும் இந்துக்களுக்கு மாபெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அவர்கள் மேற்கத்திய நடனக் கலையில் மிகுந்த திறமையுள்ளவராக திகழ்ந்த காலத்தில், அவர் தமது கலை ஆர்வம் காரணமாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தபோது, யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளை சந்திக்க வேண்டியதாயிற்று. சிவயோக சுவாமிகளின் சந்திப்பின் பின் ஆத்மீக தாக்முள்ளவராகவும், சைவ ஞான விளக்கமுள்ளவராகவும் இவர் உயர்ந்தார். இவருக்கு ஞான உபதேசம் செய்த யோகர்சுவாமிகள் இவரது முதுகிலே ஓங்கி அடித்து உனது குரல் சிங்கம்போல் உலகமெங்கும் ஒலிக்கப்போகிறது என்று ஆசீர்வதித்தார். இவரது ஆசி சுப்பிரமுனியாவை அமெரிக்க ஹவாய் ஆதீனத்தில் கடவுள் கோயிலை அமைப்பதற்கும், சைவ சித்தாந்த திருச்சபையை உருவாக்குவதற்கும், சைவாதீன தலைவராக விளங்குவதற்கும் வழி சமைத்தது. சிவயோக சுவாமிகளின் அருட்பார்வை பெற்றதிலிருந்து இவர் மாபெரும் சைவத் தொண்டுகளை உலகம் முழுவதிலும் ஆற்றியுள்ளார்.

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கைத் திருநாட்டில் இடம்பெற்றுவரும் இனமோதலைத் தடுத்து நிறுத்தி உண்மைச் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு பல வழிகளிலும் முயன்றுவந்துள்ளார். எனினும் துரதிஷ்டவசமாக சுவாமிகளால் அளவெட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசிரமம் இராணுவ நடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டமை பெரும் குறையை ஏற்படுத்தியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## கொக்குவில் பகுதியில் இம்மாதம் 3 கூட்டுறவுக் கடைகளில் திருட்டு

### இரவில் ஒரே பாணியில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,நவ.24

கொக்குவில் மேற்குப் பகுதியில் உள்ள நல்லூர் ப.நோ.கூ. சங்கக் கடை (13ஆவது கிளை) உடைக்கப்பட்டு பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் இம்மாதம் மட்டும் மூன்று சங்கக் கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் 13ஆவது கிளைக் கடை கடந்த 21ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவதினம் சங்கக் கடையின் காவலாளி கடையின் மேல்மாடியில் நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் திருடர்கள் கடையின் முன்பக்கக் கதவுப் பூட்டுக்களை உடைத்து உட்சென்று, அங்கிருந்த பொருள்களை அபகரித்துச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

கொக்குவில் கிழக்கிலுள்ள நல்லூர் ப.நோ.கூ. சங்க 19ஆம் இலக்க கிளையில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை கடந்த 7 ஆம் திகதியும் -

16ஆம் இலக்க கிளைக் கடையில் 16ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் திருடர்கள் ஒரே பாணியில் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை - என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-180)

## உரும்பிராய் சங்கக் கடையிலும் திருட்டு

கோப்பாய்,நவ.24

நீர்வேலி ப.நோ.கூ. சங்க உரும்பிராய் கிழக்குக் கிளை கடந்த புதன்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

கடையில் நிவாரண விநியோகத்திற்கு வைக்கப்பட்டிருந்த பெருமளவு பால்மா பக்கற்றுக்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் குறித்த பகுதி மக்களுக்கான நிவாரண விநியோகமும் பாதிப்படைந்துள்ளது. (க-72)

## வீதியில் வெள்ளம்; மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.24

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதி, வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்கள் போக்குவரத்துக்கு அம்மன் கோயிலடி வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

இதேசமயம் இந்தப் பகுதி வாழ் மக்கள், வீதியை புனரமைத்து தருமாறு கோரி மகஜர் ஒன்றை வலி. கிழக்கு பிரதேச சபையிடம் ஏற்கனவே கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-17)

## உதயவாக்கு

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கிட்டுப் பேசுவதை விட முரட்டுத் தனம் வேறில்லை.

## நாளை

**கார்த்திகை 10**
**ஞாயிற்றுக்கிழமை**
**திதி : தசமி**
**முன்னிரவு 10.35 வரை.**
**நட்சத்திரம் : பூரட்டாதி**
**முற்பகல் 10.35 வரை.**
**கரிநாள்**
**சுபநேரம் : 9.12 - 10.42**
**ராகுகாலம் : 4.42 - 6.12**
(பழைய நேரப்படி)

## நினைத்ததும் (எழுதியதும்) நடந்ததும்

அந்த முதலாளி ஒரு நாள் சில அச்சிட்டதாள்களுடன் அலுவலகம் வந்தார். அவைகளை அங்குள்ள அனைத்து ஊழியர்களதும் பார்வையில் படும்படியாக ஆங்காங்கு ஒட்டும்படி பணித்தார். அவைகளிலுள்ள மணிமொழி இதுதான் –

"இன்றே செய் - அதையும் நன்றே செய். எதையும் நாளைக்கு என்று ஒத்திப்போடாதே!"

'இனிமேல் தமது அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கும். மணிக்கூட்டைப் பார்த்து வேலை செய்து, கலண்டரைப் பார்த்துச் சம்பளம் பெறுபவர்கள்கூட தங்கள் கடமைகளில் அதிக அக்கறை செலுத்தி உழைப்பார்கள்' - இந்த நம்பிக்கையுடன் அவர் போய்விட்டார்.

அவர் மீண்டும் அலுவலகம் வரும்போது நாமும் வந்து மிகுதிக் கதையினைக் கவனிப்போம்.

❐❐ ❐❐ ❐❐ ❐❐

சில அறிவித்தல் அல்லது எழுத்துக்களுக்கு நல்ல பயன்கள் கிடைப்பதுபற்றி முன்னரும் ஒரு சமயம் கூறியிருந்தேன். வேறு சிலவற்றுக்கோ...

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆனந்தவிகடன்' இதழில் ஒரேயொரு தடவை படித்த குட்டிக் கதை. அது என்னைச் சிந்திக்கத் தூண்டியதால் இன்றைக்கும் அதன் சுருக்கத்தைக் கூறமுடிகிறது...




ரயில் வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் அந்தப் பெட்டிக்குள் பரிசோதகர் வருகிறார். 'பெண்கள்' என எழுதப்பட்ட அறிவித்தலின் கீழ் ஒருவன் அமர்ந்திருக்கிறான். பரிசோதகர் அவனுக்கு அந்த அறிவித்தலைச் சுட்டிக் காட்டுகிறார். 'இது பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனம். இங்கெல்லாம் நீங்கள் இருக்கக்கூடாது' என்கிறார். அவனும் மறுவார்த்தை பேசாமல் அக்கட்டளைக்கு அடிபணிந்து, எழுந்து அப்பால் சென்று விடுகிறான்.

பரிசோதகர் சில நிமிடங்களின் பின்னர் மீண்டும் அந்தப் பெட்டிக்குள் திரும்பி வருகிறார். முன்னர் குறிப்பிட்ட அந்த ஆள் வேறொரு இடத்திலே அமர்ந்திருக்கிறான். ஆனால் புகைத்துக்கொண்டிருக்கிறான். பரிசோதகருக்குப் பொல்லாத கோபம் வந்துவிடுகிறது. வேறோரு ஆசனத்துக்கு மேலே எழுதப்பட்ட 'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்ற அறிவித்தலைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார். அதற்கு அவன் அமைதியாகச் சொன்னான் - "நான் அதற்குக் கீழிருந்து புகைக்கவில்லையே!"

❐❐ ❐❐ ❐❐ ❐❐

தமிழ் நாட்டிலே தி.மு.க. ஆட்சிப் பீடம் ஏறியதும் பல மறுமலர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அவற்றிலே ஒன்றுதான் பேருந்துகளிலே திருக்குறட் பாக்கல் எழுதப்பட்டதாகும். அதனால் வள்ளுவர் பெயரும் திருக்குறளின் சிறப்பும் எங்கும் பரவலாயிற்று. இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, நமது 'மில்க்வைற்' அதிபர் சிவதர்மவள்ளல் க.கனகராசா அவர்கள் இங்கு தாமும் அப்பணியைச் செய்து பாராட்டுப் பெற்றவர்.

அப்பொழுதெல்லாம் அங்கும் சரி இங்கும் சரி நடத்துநர்கள் சிலரின் நடத்தைகளை மனதிற்கொண்டு ஒரு வேடிக்கையான வினா எழுப்பப்பட்டதாம். 'யாகாவாராயினும் நாகாக்க...', 'இனிய உளவாக இன்னாத கூறல்...' எனத் தொடங்கும் குறள்களைச் சுட்டிக் காட்டி 'இதெல்லாம் யாருக்காக? நடத்துநர்களுக்கா? பயணிகளுக்கா?' என்றெல்லாம் கேட்கப்பட்டதாம்.

'மில்க்வைற்' அதிபரும் மறைந்துவிட்டார். அவரது திருக்குறட் பணிகளும் இங்கு தொடராமற் போய்விட்டன. அந்தோ... நாமும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்கவும் இங்கு வாய்ப்பில்லாமற்போய்விட்டதே!

❐❐ ❐❐ ❐❐ ❐❐

அமரர்களான வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் போன்றவர்களை அவரது பாசறையில் வளர்ந்தவர்களே மறந்து வருகிறார்கள்(அல்லது அவர்களது படங்கள்தான் கிடைக்கவில்லையோ!). அவர்கள் சிறந்த அரசியல்வாதிகள் மட்டுமன்றி நாடறிந்த பேச்சாளர்களும் ஆவார்கள். அவர்கள் தமிழரசுக் கட்சி மேடைகளில் கேள்விகளுக்கு நகைச்சுவையாகவும், ஆணித்தரமாகவும் பதிலளித்தவர்கள். வன்னியசிங்கம் சம்பந்தப்பட்ட ஒரு விவரம் இது –

அவர் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கேள்விக்குப் பதிலளிக்கும் கட்டத்துக்கு வருகிறார்... அன்று யாருமில்லாதபோது அவரது வீட்டு மதிற்சுவர் மீது யாரோ 'துரோகி' என எழுதிவிட்டிருந்தார்கள். அன்று எங்கு பார்த்தாலும் அதுபற்றியே பேச்சாக இருந்தது. அதுபற்றிய கேள்விக்கு அவர் இப்படிப் பதிலளித்தாராம்...

"இன்று ஒருவர் என்னைச் சந்திக்க வந்தபோது நான் வீட்டிலில்லை.. வந்தவர் வந்த விவரத்தை எழுதிக் கையெழுத்திடுவதற்கான குறிப்புப் புத்தகமும் வீட்டிலில்லை. அதனால் வந்தவர் வேறு வழியின்றி வீட்டுச் சுவரிலே தனது 'பெயரை' மட்டும் எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்."

❐❐ ❐❐ ❐❐ ❐❐

**நான்** ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்த அலுவலகத்துக்கு அடுத்த நாள் அந்த முதலாளி வருகிறார். நீங்களும் அதைத்தானே எதிர்பார்த்திருந்தீர்கள், வாருங்கள் என் பின்னால்...

தமது 'இன்றே செய்...' எனத் தொடங்கும் மணிமொழிகளின் பயனாக அலுவலகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றங்களைக் கவனிக்கவேண்டுமல்லவா?

அலுவலகம் வெறிச்சோடிக் கிடக்கிறது. மனேஜரும் சில சிற்றூழியர்களும்தான் பாக்கியாக இருந்தனர். எல்லாவற்றையும் துருவித்துருவி ஆராய்ந்து விசாரித்துப் பார்த்ததில் பின்வரும் விவரங்கள் தெரிய வந்தன...

பிரதம எழுதுவினைஞர் தனது 'பதவி விலகல்' கடிதத்தை ஒப்படைத்துவிட்டு வேறொரு வேலைக்குப் போய்விட்டாராம்...

கணக்காளர் இரும்புப் பெட்டியிலிருந்த ஒரு தொகைப் பணத்துடன் கம்பி நீட்டி விட்டாராம்...

டைப்பிஸ்ட் மேனகா தனது காதலனான சக ஊழியர் மோகனுடன் ஓடிவிட்டாளாம்...

இப்படி... இன்னும்... இன்னும்...

எல்லாம் அந்த 'மணிமொழியால்' வந்த வினை. "பின்னால் பார்த்துக்கொள்ளலாம்" என்றிருந்தவர்கள் அந்த அறிவித்தலையடுத்து எல்லாவற்றையும் 'அன்றே செய்துவிட்டார்கள்.'

~ *சண் அங்கிள்.*

# கப்பலை துளைத்த துப்பாக்கி ரவை!

கொழும்பு, நவ.24

காலித் துறைமுகத்தில் நங்கூர மிட்டுள்ள மாலைதீவுக் கப்பலை கனரக துப்பாக்கியின் குண்டு ஒன்று தாக்கியுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

துறைமுகத்தில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ள கனரக ஆயுதம் ஒன்றில் இருந்து ஏவப்பட்ட குண்டு அந்தக் கப்பலைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இதனால் கப்பலின் 'ராடர்' கருவி சேதமடைந்தது. கப்பல் கப்டன் காயம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

# திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, நவ.24

வடமராட்சி வல்லிபுரக் கோயில் பரந்தாமன் ஆச்சிரம மண்டபத்தில் நாளை ஞாயிறு காலை 6 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

மீசாலையைச் சேர்ந்த 'சிவதமிழ் மணி' துரைராசா தலைமையிலான குழுவினர் திருவாசக முற்றோதலை நிகழ்த்துவர்.

(க-117)


## Wanted an Apartment

Wanted a First Floor Apartment with all modern amenities for a chief executive of an International organization preferably around Temple Road, Jaffna near International non Government organizations.

**Advt.No 1401,**
**C/o Uthayan,**
**Jaffna.**

(94735)



உ

யாழ்ப்பாணம்

## வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

(வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விஷ¤ வருஷ கார்த்திகை மாதம் 11ஆம் திகதி நாளை மறுதினம் (26-11.2001) திங்கட்கிழமை பகல் ஒரு மணி 30 நிமிஷமளவில் வரும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் மீனலக்கினமும் கூடிய சுபவேளையில் ஸ்ரீமத் பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
அதற்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை (25-11-2001) ஞாயிற்றுக் கிழமை பகல் 11.35 மணியளவில் ஆரம்பமாகும்.

*தர்மகர்த்தா,*
*வை.கந்தப்பச்செட்டியார்.*

(94762)



We Serve

306 B SRI LANKA SERVE TODAY FOR A BETTER TOMORROW 2001/2002

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**
**நடத்தும்**
## கல்விசார் சேவைத்திட்டம்

சண்டிலிப்பாய் கோட்டத்தில்
2001- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவரை ஊக்குவிக்கும்

## பாராட்டு விழா

*காலம்:-* **இன்று(24.11.2001)** சனிக்கிழமை பி.ப. 3.00 மணி
*இடம்:-* **மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்**

*பிரதமவிருந்தினர்:-* பொன்.பாலசுந்தரம்பிள்ளை *அவர்கள்*
*(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*

*கௌரவ விருந்தினர்:-* லயன் **R.**நடராஜா *அவர்கள்*
*(பிராந்தியத் தலைவர், பிராந்தியம்: 09)*

*சிறப்புவிருந்தினர்கள்:-* லயன் **A.**நல்லதம்பி *அவர்கள்*
*(தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்)*
திருமதி றெஜினா இருதயநாதன் *அவர்கள்*
*(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாம வலயம்)*
திரு. **K.**தனபாலசிங்கம் *அவர்கள்*
*(கோட்டக் கல்விப் பணிப்பாளர் - சண்டிலிப்பாய் கோட்டம்)*

*கௌரவப் பேச்சாளர்:-* டாக்டர் **C.S.**நச்சினார்க்கினியர் *அவர்கள்*
*(மருத்துவப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்)*

இவ்வைபவத்தில் ஆர்வத்துடன் பங்குபற்றி மாணவரை உற்சாகப்படுத்தும்படி லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்களையும், சமூகப் பெரியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**லயன் டாக்டர் நவமலர் கனகரட்ணம்**
கழகத்தலைவர்.

(C/19401)





We Serve

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்
நடத்தும்
## கல்விசார் சேவைத் திட்டம்

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில்
2001-ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவரை ஊக்குவிக்கும்

## நிகழ்வு

**சர்வதேச லயன்ஸ் கழகங்கள்**
**மாவட்டம்: 306B - பிராந்தியம்: 09**
**பிராந்தியத் தலைவர் லயன் R.நடராஜா** அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

உலகளாவிய ரீதியில் 186 நாடுகளில் அரசசார்பற்ற மிகவும் பெரிய ஸ்தாபனமாகச் செயற்படும் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் சமூக மேம்பாட்டிற்காக எத்தனையோ சேவைகளை நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றேன். இந்த ரீதியில் எங்கள் மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்களும் பல்வேறுபட்ட சேவைத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்ற போதிலும், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் கல்விசார் சேவைக்கு முன்னுரிமை கொடுத்து இத்துறையில் சமூகத்தினாலும் கல்விசார் துறையினராலும் பெரும் வரவேற்பைப் பெற்ற சேவையாக ஆண்டு 5 - புலமைப்பரிசில் பரீட்சையில் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் சித்தியடையும் மாணவரை ஊக்குவித்துப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கும் இந்நிகழ்வு உன்னதமான சேவையாக வரவேற்கப்படுகிறது. எங்கள் பிராந்தியத்தில் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் ஒவ்வோர் ஆண்டும் தவறாது இச்சேவையை மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சிறப்பாக நடத்திவருவதையிட்டு உண்மையில் பிராந்தியத் தலைவர் என்ற ரீதியில் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்வி வளர்ச்சியில் தடங்கல் ஏற்பட்டுள்ளதை கல்விமான்கள் அடிக்கடி தெளிவுபடுத்தி வருகின்றார்கள். இப்படியான காலகட்டத்தில் எங்கள் இளஞ்சிறார்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும் இச்சிறந்த சேவையை எல்லோரும் பெரிதும் பாராட்டுவார்கள் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது. இச்சேவையில் மாணவ சிறார்களை ஊக்குவிப்பதுடன், இம்மாணவரை வழிப்படுத்திய ஆசிரியரையும் கௌரவிப்பது மேலும் சிறந்த நடைமுறையே.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்திவரும் இவ்விழாவைப் பின்பற்றி மற்றைய கழகங்களும் நிறுவனங்களும் தங்களால் இயன்றவரை கல்வி மேம்பாட்டிற்காகப் பங்களிப்பை தொடர முன்வரவேண்டும் என வேண்டுகிறேன். உண்மையில் இப்படியான நிகழ்வில் பங்குபற்றும் வாய்ப்புக் கிட்டியதையிட்டு மிகவும் மனநிறைவு அடைகின்றேன். இவ்விழாவை இம்முறை மேலும் சிறப்பிக்க மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் அன்பான அழைப்பை ஏற்று கல்விசார் துறையில் மிகவும் உன்னதமான நிலையை வகிக்கும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பிரதம விருந்தினராக வருகை தந்துள்ளது இச்சேவைக்கு மேலும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் இச்சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

ஆர்.நடராஜா
பிராந்தியத் தலைவர்
பிராந்தியம்:9

*தேவாலய ஒழுங்கை,*
*உரும்பிராய்.*

(C/19402)



# 16ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 10 - 01 - 1935

மறைவு 09 - 11 - 2001

## திருமதி அருணாசலம் மனோன்மணி

மண்ணில் இனிய வாழ்வினுக்கு
வாய்த்த நல்ல அம்மாவே!
எண்ணியிருந்த எம்மை
ஏங்கி ஏங்கி உளம் வருந்தக்
கண்ணிற் காணா அமரலோகம்
கடந்து சென்றதேன்? அம்மா!
ஈதல் ஓம்பும் இல்லறத்தின்
இயல்பை எவர்க்கும் உணர்த்த வந்த
வண்ணக் கிளியே! மடமயிலே!!
மாதர்மணியே! மனோன்மணியே!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மகள்மார், மருமகன்மார்,
பேரக்குழந்தைகள்.

*"அருணோதயம்"*
*ஆஸ்பத்திரி வீதி,*
*மூளாய்.*

(94777)



## நெஞ்சம் நெகிழ - நினைவுகள் துடிக்கும்

# நினைவஞ்சலி

7ஆம் ஆண்டு



**அமரர் இராசையா செல்வரத்தினம்**

மண்ணில்: 08.03.1949
விண்ணில்: 30.06.1994

சிறகொடிந்த பறவைகளாய்ச் சிந்தை நொந்தோம்!
சிறப்பிழந்து சிறையினிலே உம்மை வைத்தோம்
உறவீந்த தந்தையின் பின் தனயள் ஏக
உயிரிழந்த சடங்களென உணர்வு கெட்டோம்!

3ஆம் ஆண்டு



**செல்வி தர்ஷிகா செல்வரத்தினம்**

உருவாய் - 22.12.1981
அருவாய் - 24.11.1998

இறந்ததெல்லாம் உடலந்தான் - இறப்பே இல்லை
இனியவுங்கள் நினைவெங்கள் இதயம் வாழும்!
பறந்ததெங்கள் பாசங்காள் பரமன் பாதம்
பற்றுடன் நீர் வாழ்ந்திடவே அஞ்சல் செய்தோம்!

எம் குடும்ப விளக்குகளின் ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்.

- குடும்பத்தினர் -

*ஷோபிதாஸ் ஸ்ரோர்ஸ்,ஆவரங்கால்.*

(94793)

# உருளைக்கிழங்கைச் சேமிக்க இலகுவான களஞ்சிய வசதிகள்

**கடந்த 12ஆம் திகதிய 'கமமும் புலமும்' பகுதியில் வெளியான உருளைக்கிழங்குச் செய்கை தொடர்பான கட்டுரையின் இறுதிப் பகுதி இது.**

உருளைக்கிழங்குச் செய்கைக்கான விதைத் தேவையை எடுத்து நோக்கின் ஒரு ஹெக்டேயருக்கு (2.5 ஏக்கர்) கிட்டத்தட்ட 2,000kg வரையிலான விதைகிழங்குகள் தேவைப்படுகின்றன. எனினும் இந்த அளவானது கிழங்கின் பருமனுடன் மாறக்கூடியது. இப்பயிரின் உற்பத்திச் செலவில் கிட்டத்தட்ட 50 சதவீதமான செலவானது விதைகிழங்குக் கொள்வனவுக்கே செலவாகின்றது. பெரிய பருமனுடைய கிழங்குகளை விதைகிழங்குகளாகப் பயன்படுத்தும்போது, அதனால் தோற்றுவிக்கப்படும் செலவானது மேற்குறித்த வீதத்தைவிட அதிகமாக இருக்கும். இந்நிலைமைகளில் பெரிய விதைகிழங்குகளில் இருந்து பெறப்பட்ட வெட்டுத் துண்டங்களையும் விதைத்தேவைக்காகப் பயன்படுத்தமுடியும். இதன் மூலம் மொத்த உற்பத்திச் செலவை அதன் காற்பங்கினால் குறைக்கமுடியும். இச்செயற்பாட்டைச் செய்வதற்கு முன்னர் இது பற்றிய சில விடயங்களைக் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும். ஓர் உருளைக்கிழங்கைப் பொறுத்தமட்டில் அது இரு முனைகளைக் கொண்டிருக்கும். ஒரு முனை தாவரத்தையும் கிழங்கையும் இணைப்பதாக இருக்கும். மற்றைய முனை முன்னையதற்கு எதிரான முனையாக இருக்கும். மேற்குறிப்பிட்ட எதிர் முனையிலேயே கக்க அரும்புகளான கண் அரும்புகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும். எனவே கிழங்கைத் துண்டமாக வெட்டும்போது அதை நீள்பக்கவாட்டில் வெட்டுவதன மூலம் இரு துண்டங்களிலும் குறிப்பிடத்தக்களவு சம எண்ணிக்கையான அரும்புகள் தோற்றுவிக்கப்படும் என்பதை உறுதி செய்துகொள்ளலாம். இதைவிடுத்து கிழங்கின் குறுக்குப்பாடாக வெட்டி, வெட்டுத் துண்டங்களைப் பெறும்போது ஒரு துண்டத்தில் மிகக்கூடுதலான அரும்புகளும் மறு துண்டத்தில் மிகச் சொற்ப அரும்புகளும் காணப்படும் நிலை ஏற்படும். மிகக் குறைந்த அரும்புகளைக் கொண்ட துண்டங்களின் முளைத்தல் வீதம் மிகக் குறைவாக இருக்கும் அல்லது மிகச் சொற்ப எண்ணிக்கையான பிரதான தண்டுகளைத் தோற்றுவிக்கும். இந்நிலைமையில் அதிக விளைவை எதிர்பார்க்க முடியாது. துண்டங்களை வெட்டும்போது நன்கு கூரிய - தொற்றுநீக்கப்பட்ட - கத்தியினால் இயலுமான அளவிற்கு வெட்டுமுகங்களின் அளவு குறைவாக இருக்கக்கூடியவாறு வெட்டுதல் அவசியமாகும். ஏனெனில் பெரியளவிலான வெட்டுமுகங்களைக் கொண்ட துண்டங்கள் இலகுவில் நுண்ணங்கித் தொற்றுக்கு உட்படக்கூடியவையாகும். வெட்டப்பட்ட துணடங்களின் வெட்டுமுகங்களை 'கப்ரான்' அல்லது 'அந்திரக்கோல்' போன்ற பங்கசு கொல்லிக் கலவையில் தோய்த்து, வெட்டுமுகம் கீழ்நோக்கி இருக்கத்தக்கவாறு நடுகையை மேற்கொள்ளலாம். துண்டங்கள் நடப்படும் இடங்களில் நீர் தேங்குவது, அவற்றில் அழுகல் ஏற்படுவதைத் துரிதப்படுத்தும். எனவே துண்டங்களைப் புருவங்களில் நடுதல் விரும்பத்தக்கது.

இப்பயிரைப் பொறுத்தமட்டில் அடிக்கட்டு, மேற்கட்டு, வளமாக்கிகளை விவசாயத் திணைக்களத்தின் சிபார்சுக்கேற்பப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது. இப்பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலைமைகளில் நைதரசன் வளமாக்கிப் பிரயோகம் மூலம் அங்குரப்பகுதியின் விருத்தியைத் தூண்டுதல் அவசியமெனினும், மிதமிஞ்சிய பிரயோகமானது பயிரின் கிழங்கு உருவாக்கத்தைத் தாமதமடையச் செய்கின்றது. இந்நிலைமைகளில் அறுவடையைப் பிற்போடுவதன் மூலமே முழு விளைவையும் பெறக்கூடியதாக இருக்கும். கிழங்கின் இறுதி வளர்ச்சிக் காலங்களில் மிதமிஞ்சிய நைதரசன் வளமாக்கிப் பிரயோகமானது பல சோணைகளைக் கொண்ட கிழங்குகளின உருவாக்கத்தைத் தூண்டுகின்றது. இது சந்தையில் கிழங்குகளின் தரத்தைக் குறைக்கக்கூடிய ஓர் அம்சமாகும்.

உருளைக்கிழங்குப் பயிர் முளைத்து 30-35 நாள்கள் அளவில் நிலத்துக்குக் கீழான பிரதான தண்டுகளின் கக்க அரும்புகளில் இருந்து கிழங்குகளைத் தோற்றுவிக்கும் நிலக்கீழ்த் தண்டுகள் வளர்ச்சியடைகின்றன. இதை அடுத்துள்ள சில நாள்களிலேயே கிழங்கு உருவாக்கம் நடைபெறுகின்றது. இக்காலகட்டத்தில் நிலவும் வரட்சித்தன்மைகள் அல்லது களை எடுத்தல் போன்ற நிலக்கீழ்த் தண்டுகளுக்குப் பொறிமுறைக் காயங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் உருவாக இருக்கும் கிழங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் மண் அணைப்பின் பற்றாக்குறை அல்லது நீர்ப்பாசனத்தின்போது ஏற்படும் மண் அரிப்பு காரணமாக சூழலுக்கு வெளிக்காட்டப்படும் நிலக்கீழ்த் தண்டுகள், சூரிய ஒளி படுவதன் மூலம் சாதாரண ஒளித்தொகுப்புச் செய்யும் தண்டுகளைப் போன்று வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றன. கிழங்கு உருவாக்கத்தின் பின்னர் மேற்குறித்த காரணங்களினால் கிழங்குகள் சூழலுக்கு வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களில அவற்றில் ஒளிபடும் பகுதியில் உள்ள தோல் பச்சை நிறமானதாக மாற்றப்படும். இதன்போது சொலானின் எனப்படும் கசப்புச் சுவையுடைய நச்சுப் பதார்த்தம் கிழங்குகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை பாவனைக்கு உகந்தவை அல்ல. இப்பிரச்சினை உள்ள இடங்களைத் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் இனங்கண்டு, தேவையான இடங்களில் மண் அணைப்புச் செய்வதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம்.

**குடாநாட்டில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கைக் காலம் நெருங்குவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**செ.சத்தியசீலன்**
உதவி விரிவுரையாளர்,
பயிரியற்றுறை, விவசாய பீடம்.

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

### அறுவடை

பெரும்பாலான யாழ். உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் சந்தை விலையைக் கருத்திற்கொண்டு கிழங்குகளின் குறிப்பிட்ட முதிர்ச்சிககு முன்னரே (கிட்டத்தட்ட 55 நாள்களின பின்) அறுவடையை மேற்கொள்கிறார்கள். இந்நிலைமைகளில் மிகக் குறைந்த விளைவையே எதிர்பார்க்க முடியும். அத்துடன் இக்கிழங்குகள் மிகவும் சிறியனவாகவும், இலகுவில் இவற்றின் தோல்கள் பொறிமுறைக் காயங்களால் சேதமடையக்கூடியனவாகவும் காணப்படும். அத்துடன் இக்கிழங்குகளைச் சேமித்து வைப்பதும் மிகக்கடினமான ஒரு விடயமாகும். ஏனெனில் முதிர்ச்சியடைந்த கிழங்குகளின் தோல் கிழங்கின் சேமிப்புப் பகுதியில் இருந்து தம் மூடான நீரிழப்பை அனுமதிப்பதில்லை. ஆனால் முதிர்ச்சியடையாத கிழங்குகளின் தோல், தம் மூடாக ஏற்படும் நீரிழப்பைத் தடுக்கும் ஆற்றல் அற்றதாகக் காணப்படுகிறது. எனவே இக்கிழங்குகளைக் களஞ்சியப்படுத்துவது என்பது ஒரு பிரயோசனமற்ற செயலாகும்.

யாழ்.விவசாயிகளிடையே கிழங்குகளைக் களஞ்சியப்படுத்திச் சந்தைக்கு அனுப்பும் பழக்கம் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. பொதுவாக மாசிமாதம் 2ஆம், 3ஆம் கிழமைகளளவில் யாழ்.சந்தைகளில் கிழங்கின் கிடைக்கும் தன்மை பாவனைத் தேவையை விட அதிகமாகவே காணப்படுகின்றது. திட்டமிடப்படாத நடுகையை மேற்கொள்வதும் - களஞ்சியப்படுத்தாமையுமே - மேற்குறித்த நிலைமைக்கான முக்கிய காரணங்களாகும்.



இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களில் 2.2 - 3.3°c வெப்பநிலையில் 75-80 வீத ஈரப்பதனில் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு உருளைக் கிழங்குகள் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் இந்த அளவுக்கான களஞ்சிய வசதிகள் இல்லை எனினும், மலைநாட்டுப் பிரதேசங்களில் பரவிய சூரியஒளிக் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஓர் உருளைக் கிழங்குக் களஞ்சியத்திற்கு இருக்க வேண்டிய அம்சங்களாக, தாழ்வெப்பநிலை (<20°c), மிதமான காற்றோட்டம், பரவிய சூரியஒளி, அதிக அளவு ஈரப்பதன் என்பவற்றைக் குறிப்பிடலாம். தாழ் வெப்பநிலை, அதிகரித்த ஈரப்பதன் என்பவற்றினால் கிழங்கில் இருந்து சூழலுக்கு இழக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருக்கும். அதேநேரம் தாழ் வெப்பநிலைகளில் கிழங்குகளின் சுவாச வீதம் மிக இழிவாக இருக்கும். இக்காரணங்களினால் கிழங்குகளில் ஏற்படும் நிறைக்குறைவும் இழிவானதாக இருக்கும். மிக அதிகரித்த ஈரப்பதன் நிலைமைகளில் கிழங்குகளில் இலகுவாகப் பங்கசு வித்திகளின் தொற்றல் ஏற்பட்டு அவை அழுகல் அடையும் நிலை ஏற்படும். களஞ்சியங்களில் கிழங்குகளின் சுவாசத்தின்போது வெளிவிடப்படும் காபனீர் ஒட்சைட்டு வாயு களஞ்சிய சூழலில் தேங்குவதால் அச்சூழலின் வெப்பநிலை அதிகரித்து, கிழங்குகளில் அழுகலைத் தோற்றுவிக்கலாம். ஆனால் மிதமான காற்றோட்ட நிலைமைகளில் கிழங்குகளில் இருந்து வெளிவிடப்படும் காபனீர் ஒட்சைட்டு ஓரளவிற்கு அகற்றப்படுவதனால் மேற்குறித்த பாதிப்பு தவிர்க்கப்படுகிறது. அதிகரித்த காற்றோட்ட நிலைமைகளில் களஞ்சியச் சூழலில் ஒட்சிசனின் அளவு அதிகரிப்பதனால் அது கிழங்குகளின் சுவாச வீதத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த ஏதுவாகிறது. பரவல் ஒளி நிலைமைகளில் கிழங்குகளைக் களஞ்சியப்படுத்தும்போது கிழங்குகளில் முளை கொள்ளல் ஏற்படுவதைத் தடுக்கலாம். கிழங்குகளில் முளை கொள்ளல் நிகழும்போது அவற்றின சுவாசவீதம் மிகமிக அதிகமாக இருப்பதனால் அவற்றில் சடுதியான நிறைக்குறைவு ஏற்படும். மேற்குறித்த கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு நாமே நமது பிரதேசத்திற்கேற்ற எளிய, தற்காலிக களஞ்சியங்களை நிர்மாணிக்க முடியும். நன்கு நிழலான ஓர் இடத்தில் பரவல் ஒளி கிடைக்கக்கூடியதாகவும், ஓரளவான காற்றோட்டம் கிடைக்கக் கூடியதாகவும் கொட்டகைகளை அமைத்து, அவற்றினுள் பரண்களில் ஒரு படைத் தடிப்பில் கிழங்குகளை அடுக்கி வைத்துச் சேமிக்கலாம். கொட்டகையின் அடிப்பகுதியில் மணல் மண்ணினை இட்டு, அதை அடிக்கடி நீரினால் நனைப்பதன்மூலம் களஞ்சியச் சூழலின் ஈரப்பதனை ஓரளவிற்கு அதிகரிக்க முடியும். களஞ்சியப்படுத்தற் காலங்களில் தொடர்ச்சியான கண்காணிப்புகளை மேற்கொண்டு, அழுகல் அடையும் கிழங்குகளைக் களஞ்சியத் தொகுதியில் இருந்து அகற்றுதல் அத்தியாவசியமான ஒரு செயல்முறையாகும்.

காலம் தாழ்த்திய அறுவடை மூலம் கிழங்குகளை நிலத்தின் கீழ் சேமித்து வைத்தலும், ஓர் இலகுவானதும் செலவற்றதுமான முறையாகும். அத்துடன் மற்றைய களஞ்சிய முறைகளுடன் ஒப்பிடும்போது இம்முறையில் கிழங்குகள் புதுப்பொலிவுடன், சுருக்கமற்றவையாக இருப்பது சந்தையில் அதிக வரவேற்பைப் பெறக்கூடியதாக உள்ளது. கடந்த காலங்களில் சில யாழ். உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் இம்முறையைக் கைக்கொண்டு இலாபம் அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இம்முறையில் கொடிகள் முற்றி வாடி உலர்ந்த பின்னர் உருளைக் கிழங்கு நிலத்தில் விடப்படுகிறது. இந் நிலைமைகளில் அதிகரித்த மண் வெப்பநிலை காணப்பட்டால் சில கிழங்குகள் வெதும்பல் அடைந்து அழுகுவதுடன் ஒட்டுமொத்தமான கிழங்குகளின் சுவாசவீதம் கூட்டப்பட்டு, விளைவில் குறைவு ஏற்பட இடமுண்டு. இந்நிலைமைகளில் மட்டுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத்தினால் நிலத்தை உலரவிடாது தடுத்தல் அல்லது வேறேதேனும் முறைகளைப் பயன்படுத்தி மண்வெப்பநிலையில் உயர்வு ஏற்படுவதைத் தடுப்பதன் மூலம் மேற்குறித்த பாதிப்புகளின் தாக்கத்தைக் குறைக்கலாம். பொதுவாக இம்முறையை மணற்பாங்கான தோட்டங்களில் மேற்கொள்வதே விரும்பத்தக்கது. இம்முறையில் களஞ்சியப்படுத்த முனையும் சந்தர்ப்பங்களில் செய்கை பண்ணப்படும் கிழங்கினத்தின் உறங்குநிலை பற்றி அறிந்திருத்தல் முக்கியமான ஓர் அம்சமாகும். பொதுவாக நீண்ட (2-2 1/2 மாதம்) கால உறங்குநிலை கொண்ட கிழங்கினங்களுக்கே இது பொருத்தமான முறையாகும். குறுங் கால அல்லது உறங்குநிலை அற்ற கிழங்கினங்களாயின் அவை தோட்டங்களில் முளைக்கும் நிலை ஏற்படும். எனினும் இங்கு பயிரிடப்படும் டிசிறி இனம் குறிப்பிடத்தக்களவு கால உறங்கு நிலை கொண்டதாக இருப்பதனால் இக்களஞ்சிய முறையைப் பின்பற்ற முடியும். ★

## வாசகர் திருமுகம்

### நீதி கிடைக்குமா?

1999ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய நான் அந்த ஆண்டின் பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி காரணமாக ஒருசில புள்ளி வித்தியாசத்தால் பல்கலைக்கழக அனுமதியை இழந்தேன்.

எனினும் மீண்டும் 2001ஆம் ஆண்டு கல்வியியற் கல்லூரி அனுமதிக்காக (சமூகக்கல்வி) விண்ணப்பித்தேன். ஆனால் நடந்ததை யார் அறிவார்? கல்வியியற் கல்லூரியின் நேர்முகப் பரீட்சைக்கான தகைமை இருந்தும் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை உடையவர்கள் பட்டியலில் எனது பெயர் இடம்பெறவில்லை.

என்னைவிடக் குறைந்த புள்ளியுடையவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குக் கடிதம் கிடைத்துள்ளது. எனக்குக் கிடைக்காதது ஏன்? சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அலைந்து திரிந்து முறையிட்டும் பலன் கிடைக்கவில்லை. நேர்முகப் பரீட்சைக்கு இன்னும் ஒருசில தினங்கள் மட்டுமே உள்ளநிலையில் நான் என்ன செய்வது? எனக்கு நீதி கிடைக்குமா? சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுப்பார்களா?

சு.சிறீகரசர்மா
*மானிப்பாய்.* (பாதிக்கப்பட்ட மாணவன்)

### ஆஸ்பத்திரிக்கு உதவுவோம்!

யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சில தனியார் அமைப்புக்கள் உதவ முன்வந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஆரோக்கியமான விடயமாகும்.

எல்லாவற்றிற்கும் எம்மை மாற்றாந்தாய்போல் நடத்துபவர்களை நம்பியிராது, நாமே நமது பிரதேச வளர்ச்சிக்கு முண்டுகொடுத்தால் மற்றவர்களையும் வாழவைப்பதுடன் நாமும் பயனடையலாம்.

தற்பொழுது கொழும்பிலும், மேலை நாடுகளிலும் பல்வேறு நோய்களுக்கான சத்திரசிகிச்சைகள் 'லேப்ரஸ்கொப்பி' (Lapres copy) முறைமூலம் மிகவும் இலகுவாக, சர்வசாதாரணமாகச் செய்யப்படுகின்றன. நோயாளிக்கு எவ்வித இரத்த இழப்போ, வேதனையோ இன்றி ஒருநாள் பொழுதிலேயே சிகிச்சையை முடித்து வீடுதிரும்பமுடிகின்றது.

சத்திரசிகிச்சைகளுக்குப் பயந்து நோயை மேலும் வளர்ப்பவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம் ஆகும். ஆனால் இங்கு குடாநாட்டில் எந்தச் சிறுநோய்க்கும் பாரம்பரிய முறைப்படி உடலை வெட்டித் திறந்தே சிகிச்சையை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கியநிலை உள்ளதால் நோயாளர்கள் பெருஞ்சிரமங்களை - அவஸ்த்தைகளை - எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே வசதிபடைத்த தனியார் அமைப்புக்கள் இச்சிகிச்சைக் கருவிகளை யாழ். ஆஸ்பத்திரிக்குப் பெற்றுக்கொடுப்பதன் மூலம், பிறருக்கும் உதவிபுரிந்து தமக்கும் நன்மையைத் தேடிக்கொள்ளமுடியும். போர்ப் பூமியில் இச்சாதனங்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்துவிடும்.

*சாவகச்சேரி.* எஸ்.யூட்.

### மூத்த கலைஞர்களை புறக்கணித்தது ஏன்?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மூத்த கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழாவில் மூத்த கலைஞர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் காலத்தில் அவசர அவசரமாக - ஏனோ தானோ என்ற எண்ணத்துடன் - கலைஞர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டதால் இந்தத் தவறு ஏற்பட்டுவிட்டதா என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எனினும் விருதுபெறும் கலைஞர்களைத் தெரிவு செய்வதில் முன்னின்று செயற்பட்ட பிரதேச செயலர்களும், பிரதேச கலாசார அலுவலர்களும் இந்த விவகாரத்தில் கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

ஏனவே இனிவரும் காலங்களிலாவது இத்தகைய தவறுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, மூத்த கலைஞர்களின் சிபார்சுடன் கலைஞர் பட்டியல் தயாரிக்கப்படவேண்டுமெனவும் ஆலோசனை தெரிவிக்கின்றேன்.

*சண்டிலிப்பாய்.* அ.அமிர்தலிங்கம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கடை வாடகைக்கு

217, நாவலர் வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும். (94743)

## மணமகள் தேவை

கனடாவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட, யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 27வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, 8 கிரகபாவமுள்ள மணமகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் DECEMBER நடுப்பகுதியில் வரவுள்ளார். தொடர்பு: விள.இல. 1399, மே/பா.உதயன். (94733)

## நூல்கள் தேவை

"இலங்கையில் கலை வளர்ச்சி" என்ற கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் எழுதிய நூலும், INDIAN MUSIC என்ற எம்.மகேஸ்வரிதேவி அவர்கள் எழுதிய நூலும் பார்வையிடுவதற்கு அல்லது கொள்வனவு செய்யத் தேவை. தொடர்பு: எஸ்.சிவாணந்தராஜா, செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு. (94731)

## வகுப்புகள்

ரஷ்யாவில் உயர்கல்வி பயில விரும்புவோரும் ஆர்வமுள்ள ஏனையோரும் ரஷ்ய மொழியைப் பயிலலாம். 30.11.2001இற்கு முன்னர் விணணப்பிக்கவும். விளம்பர இல. 1403, மே/பா. உதயன். (94801)

## ஆங்கிலக் கல்வி

உங்கள் வீடுகளுக்கு வந்து பட்டதாரி ஆசிரியையினால் தரம் 6 - 10 வரை மாணவர்களுக்கும், 6 மாத கால ஆங்கில இலக்கணம் (பொதுவாகவும்) கற்பிக்கப்படும். விளம்பர இல.1402, மே/பா, உதயன்.(94788)

## தவறிவிட்டது

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை சுகுமாரி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.816383404V), விசேட அ.அட்டை (இல.0906027074) என்பனவும் சுதுமலை தெற்கைச் சேர்ந்த திலகராசா சோபியா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0905025882)யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாண பஸ் நிலைய விளம்பரப் பகுதியில் ஒப்படைத்து உதவவும். (94803)

பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த குகானந்தன் மாசிலன் என்பவருடைய தே. அ.அ. (இல.752643580V), விசேட அ.அ. (இல.0907002598) எனபன பரமேஸ்வராச் சந்திக்கும் இணுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (94805)

## விற்பனைக்கு

பசுக்கன்று விற்பனைக்கு உண்டு. யேசி இனம், வயது ஒன்று. தொடர்பு: து.சரவணபவானந்தன், கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு. (94812)

## இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள் புறொயிலர், கல்பேட் என்பன தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (94806)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து பாதிக்கோழி உட்பட பெற்றுக்கொள்லாம். 1Kg 165/=. தொடர்பு: இல.157, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (94778)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நா.துரைசிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய்.(94706)

இறைச்சிக்கோழி Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் விசேட சேவை. இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94697)

## 'பிக்-அப்' ஒப்படைப்பு

வலிகாமம் கல்வி வலயத்தின் பாவனையில் இருந்த 'பிக்-அப்' வாகனம் வடக்கு - கிழக்கு மாகாணச் செயலாளரின் உத்தரவுக்கமைய வடமராட்சிக் கல்வி வலயத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-152)

---

### சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## பதவி வெற்றிடம் - தொழிலாளி

மேற்படி பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இல்லம், பாற்பண்ணை, வீட்டுத் தோட்டம் ஆகியவற்றில் அவ்வப்போது தரப்படும் பணிகளைச் செய்யக்கூடிய உடல் வலுவும், ஆரோக்கியமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை: 30 - 50

☆ மேற்படி பதவிக்கு தொண்டூதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.
☆ விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதிநாள்: 29.11.2001.

சோ.பத்மநாதன்
செயலாளர்.

கலாசாலை றோட்,
திருநெல்வேலி. (C/19415)

---

## "மக்கள் சேவை தொடரட்டும்"



### தி.மகேஸ்வரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஐக்கிய தேசிய கட்சி
முதன்மை வேட்பாளரும்)

எவருக்கும் அடி பணியாது
எவரிடமும் விலை போகாது
எமது மண்ணையும் மக்களையும்
நேசித்து கடந்த நாடாளுமன்றில்
தமிழ் மக்களுக்காக அதிலும்
இடம்பெயர்ந்த தென்மராட்சி
மக்களுக்காகக் குரல் கொடுத்த
இவரது சேவையைப் பாராட்டுவதோடு,
மக்கள் சேவை தொடரவும்
வரும் தேர்தலில் அமோக
வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன்.

(தென்மராட்சி மக்களே நாம் மீண்டும் எமது இடத்துக்குச் செல்வது மகேஸ்வரன் வெற்றியிலேயே தங்கியுள்ளதால் அனைவரும் அணி திரண்டு வாக்களிப்போமாக.)

ச.அருள்ராஜ்,
சாவகச்சேரி.
(93947)

---


## பாராட்டி நன்றி நவில்கின்றோம்

**நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி**
**ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்**

மேற்படி ஆலய திருத்த நிதிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டரை லட்சம் ரூபாவில் ஒன்றேகால் லட்சம் ரூபாவை உடனடியாகத் தந்துதவியவர்களான -



வடக்கு புனர்வாழ்வு மற்றும்
வடக்கு - கிழக்கு தமிழ் விவகார
இந்து சமய கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத்
தலைவருமான
உயர்திரு.
**ந.மதனராஜா** (J.P.U.M.)
அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபையினர்,
*ஊர்காவற்றுறை.*
(94815)

---

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 27 - 02 - 1951



உதிர்வு 05 - 12 - 2000

### அமரர் வேதவனம் தபோதநாயகம்

*(ஆசிரியர்)*

திதி: பூர்வபக்க நவமி 24.11.2001

நீண்டதோர் துயரம் நீரெமக்களித்துவிட்டு
இவ்வுலகதனை விட்டகன்ற தேனோ?
ஆண்டுகள் பலவும் ஆகிடினும் அவனிதனில்
ஐயாவுன் நினைவு எம்மைவிட்டு அகன்றிடுமோ!

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*
(94819)

---

வெள்ளிவிழாக் காணும்

## "சீயோன் தேவாலயம்"

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்,
அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா."
சங்.127:1

**வெள்ளிவிழாக் காணும் சீயோனே!**
**வேந்தன் இயேசுவின் கிருபையினால்**
**வென்றெடுத்த ஆத்துமாக்களோடு**
**வேட்கை கொண்டு, ஆத்துமாக்கள் நாடும்**
**ஜோசாயாவே, இன்பாவே, உம்முடன்**
**தோள் கொடுக்கும் மூப்பர், ஊழியரே**
**வேதம் கற்கும் வேதியரே நீவிர்**
**வாழிய! வாழியவே!!**

நாளை (25.11.2001) ஞாயிறு காலை 9.30 மணிக்கு இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நிகழும் நன்றி நவிலும் ஆராதனைக்கு நயமுடன் வாரீர்.

(94814) - சீயோன் குடும்பத்தினர்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
மேற்படி எமது சங்க கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு
10 லட்சம் ரூபாவை ஒதுக்கித்தந்துதவியவர்களான,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்





வலி.தென் மேற்கு
பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.
**வெலிச்சோர் அன்ரன்**
**ஜோண்சன்**
அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகம்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.

ப.ப.ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு. (C/19414)

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் தெற்கு, இருபாலையில் அமைந்துள்ள கேணிக்குளம்பதி லிங்க விநாயகர் தேவஸ்தானத்திற்கும், தனிப்பனை வீரபத்திர் சுவாமி தேவஸ்தானத்திறகும் புனர்நிர்மாணப் பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகத் தந்துதவியவர்களான,



மாண்புமிகு அமைச்சர்
உயர்திரு.
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
உயர்திரு.
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்





வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்
**திரு. பூ.குணசிங்கம்** J.P.U.M.
அவர்களையும்

கோப்பாய்த் தொகுதி ஈ.பி.டி.பி.
அமைப்பாளரும் வலி.கிழக்கு
பிரதேச சபை உபதலைவருமான
**திரு.U.L.A.ரவி**
அவர்களையும்



இறையருள் பெற்று சிறப்பான பணிபுரிய நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
எமது வேண்டுகோளையேற்று நிதி வழங்கியமைக்காக நன்றி கூறுகின்றோம்.

| | |
|---|---|
| தனிப்பனை வீரபத்திரர் சுவாமி | கேணிக்குளம்பதி லிங்க விநாயகர் |
| தேவஸ்தானம், | தேவஸ்தானம், |
| கோப்பாய் தெற்கு. | இருபாலை கிழக்கு. |

கி.தங்கவடிவேல்
*தலைவர்.*
அபிவிருத்தி ஆலோசனைச் சபை
வலி.கிழக்கு பிரதேச உபஅலுவலகம், கோப்பாய். (94810)

# இந்த வார இராசி பலன்

## 25 - 11 - 2001 – 01 - 12 - 2001

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| சந் | | சனி | வி ரா |
| செ | இராசிச்சக்கரம் | | |
| | | | |
| கே | புத சூ ▼ | வெ | |

### மாற்றம்

**25 - 11 - 2001 இல் பூரட்டாதி 4 மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

**28 - 11 - 2001 இல் வெள்ளி விருச்சிகம் இராசியில் மாறும்.**

தேர்தலில் கடும் போட்டி, அழிவுகள் தொடர இடமுண்டு. சட்டத்தின் கரங்கள் கட்டப்பட லாம். நிறைவேற்று அதிகாரங்கள்,புதிய அழுத்தம், தாக்கங்களைக் கொடுக்கலாம். அரசியல் தலைவர்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்து மக்களின் மனதைத் திசை திருப்ப முனைவர். இந்திய அரசியலில் திசை திருப்பம் ஏற்படும். காஷ்மீர் எல்லையில் கடும் நடவடிக்கைகள், தீவிரவாதிகள் நசுக்கப்படுவர். தொடர்ந்து பல யுக்திகளை அமெரிக்காவும், இந்தியாவும் பயன்படுத்தலாம். பஸிபிக், அத்திலாந்திக் நாடுகளில் செயற்கை அழிவுகளும், இந்து சமுத்திரப்பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம், காற்றழுத்தம், வெள்ளப்பெருக்கு ஏற்படும் பலன்கள் உண்டு எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பெற்றோர் பிள்ளைகள் மீது வைத்துள்ள பாச அலை போன்று பெற்றோல் விநியோகிக்கும் சிலர், சிலர் மீது வைத்துள்ள பாச அலையால் பலரின் மனங்களை நோகச் செய்கிறார்கள். தொழிலிடத்தில் சமநிலையில்லாமல் நடக்கும் சிலரால் நீங்களும் பாதிக்கப்பட்டு வேதனைப்படுவீர்கள். அரசியலால் புகழ், அரச உதவி, வருமானப் பெருக்கம், பெரியவர்கள் உதவி, கலையில் ஈடுபாடு, நகை, புடைவைச்செலவுகள், பூஜைகளில் ஈடுபாடு, கவர்ச்சியால் ஒரு மயக்கம் என்பன இருக்கும். வயிறு, நரம்பு, உஷ்ண குளிர் பீடை, தோல்வருத்தம் என்பன கொடுக்கும். மருந்துத்துறை, கொம்பியூட்டர்த்துறை,செய்தித்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். காணி, வீடு சம்சந்தமான செலவுகள் சிலருக்கு திடீரென ஏற்படப் பலன் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி.

### இடபம்

பலர் காசுக்கு, சிலர் இலட்சியத்திற்கு தொழில் செய்வார்கள். வேறுசிலர் காசுக்கும் இலட்சியத்திற்கும் சேர்த்துத் தொழில் செய்வார்கள். அவரவர் மனநிலைக்கு ஏற்ப தொழிலில் சிறப்பு அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் இலாபங்கள் ஏற்படும். எடுத்த காரியங்களால் அலைச்சல், திடீரென நண்பர்களின் உதவிகள், பிறருக்கு ஆலோசனை என்பன நடக்கும். சலத்தொல்லை, நெஞ்சு வருத்தம், சிரசுவருத்தங்கள் சிலருக்கு வர இடம் உண்டு. விவசாயத்துறை, அரசியல் துறை, பாதுகாப்புத்துறை, கலை, இசைத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பல நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள் :- வியாழன், வெள்ளி.

### மிதுனம்

சாமி வேஷம் போடும் பலர் அவசரத்தில் தவறுகளைச் செய்து மக்களைக் கஷ்டப் படுத்துகிறார்கள். உண்மைக்காகப் போராடும் உங்களைப் போன்றவர்கள் தொழில் ஸ்தானத்தில் குறை கேட்பீர்கள். பிரயாண எண்ணங்கள் வரும். அரசபயம், களவுகள், எதிர்ப்பாளர்களுடன் வேதனை அரசியல் வாதிகளால் இலாபங்கள் கிடைக்கும். வாய்வு, வாதம், உரசல் காயங்கள், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை, செய்தித் துறை, குருத்துறை போன்ற துறையினர் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி.

### கடகம்

பலருக்கு விளங்காத இரகசியங்கள் சிலருக்கு விளங்குவதனால் நம்மத்தியில் சந்தேகங்கள் மலிகின்றன. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டம், எதிரிகளால் துன்பங்கள், இடமாற்றங்கள் என்பன ஏற்பட இடம் உண்டு. பொருள்களில் கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருக்கவும். வீண் மனப் பயம் கொடுக்கலாம். வாதப் பிடிப்பு, சளிவருத்தங்கள், வீண்கவலை என்பன ஏற்படும். மருந்துத்துறை, அரசியல் துறை, செய்தித்துறை போன்றதுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### சிங்கம்

பென்ரகனில் மோதிவிட்டு தலிபான்கள் படும்பாட்டைப் பாருங்கள். அதுபோன்று தான் உங்களுடன் மோதுபவர்களை நிச்சயம் நீங்கள் மன்னிக்கவே மாட்டீர்கள். புத்தி, யுக்தி, சக்தியுள்ள உங்களுடன் மோதுபவர்களை அறிந்து அவர்களைக் களையாமல்விட்டீர்களாயின் அவர்களால் பல தீங்குகள் உங்களுக்கு நேரலாம். எனவே தொழில் ஸ்தானத்தில்நிதானமாக இருங்கள். முயற்சிகளில் வெற்றி. அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். புதிய திட்டங்களை தொழில் ஸ்தானத்தில் நடைமுறைப்படுத்துவீர்கள். தூரத்துச் செய்திகள் கிடைக்கும். வாய்வு, கைகால் பிடிப்பு இருக்கும். எதையும் அடிக்கடி ஆராய்வீர்கள். தெய்வத் தொண்டு சிறக்கும். வியாபாரத்துறை, குருத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக இலாபங்களும் முன்னேற்றங்களும் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### கன்னி

படியைக் கொடுத்து குடியைப் பழக்கி தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெறும் விந்தை ஜனநாயக உலகில் சர்வசாதாரணமாகும். தொழில் ஸ்தானத்தில் அதிகாரிகளால் தொல்லை உடல் நலம் பாதிக்கலாம். இனஜனங்களிடமிருந்து செய்திவருதல், பிரயாண யோசனைகள் ஏற்படல், பொருளில் நிதானமாகக் கொடுக்கல் வாங்கல்க செய்தல் போன்ற பலன்கள் நடக்கும். இடுப்புநோ, வாய்வு, சளித்தொல்லைகள் என்பனவரும். ரி. வி., சினிமாத்துறை, கொம்பியூட்டர் துறை, செய்தித்துறை, வியாபாரம் போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மைகளை அடைவார்கள். படிப்படியாக புதிய திட்டங்கள் வெற்றிகள் தரும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### துலாம்

தேர்தலால் நாட்டில் பல மாற்றங்களை மக்கள் எதிர் பார்த்தாலும் ஆட்சிப் பீடத்தவர்கள் தம்மைத்தக்க வைக்க எத்தனையோ பிரயத்தனங்களைச் செய்யாமல் இருக்கமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் உற்சாகமாக இருப்பீர்கள். கடமையை நிறைவு செய்வீர்கள். மேலதிகாரிகளின் நன்மதிப்புக்கள் இருக்கும். நரம்புநோ, தோல்வருத்தம், நாரிநோ, கிருமித்தாக்கம், குளிரால் பீடைகள் என்பன கொடுக்கும். கைகால் விறைப்புக்கு தைலங்கள் பாவிக்கவும். எலும்பில் வருத்தங்கள், வெட்டுக்காயங்கள் என்பனவும் வரலாம். உடல்நிலையில் கவனமாக இருக்கவும். புடைவைத்துறை, கடல்துறை, ஆசிரியத்துறை, சட்டத் துறை, அரசியல் துறை போன்ற துறையினர்கள் பல ஆதாயங்களை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

இந்த இராசியில் பிறந்த பலர் பிறக்கும் பொழுது சரியாக 9 மாதத்திற்கு முன்பு சொந்த பந்தத்தில் யாராவது இறந்திருந்தால் அவன் ஆத்மா இவரின் உடம்பில் கருவாகி உருவாகும் என நம்பப்படும் சூட்சுமத்தை அறிந்தவர்கள் சிலர் எம்மத்தியில் இருக்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் பதற்றம், வீட்டில் அபிப்பிராய பேதம் அடிக்கடி யோசனை, புதிய முயற்சி, தூரதேசச் செய்திகள் வரல் என்பன ஏற்படும். கைகால் பிடிப்பு, நாரி, தொண்டை, சிரசு,கண் வருத்தங்களும் வர இடமுண்டு. சளிக்கும் வைத்தியம் செய்யவும். சினிமாத்துறை, செய்தித்துறை, தோட்டத்துறை, மின்சாரம், எண்ணெய்த் துறைபோன்ற தொடர்பானவர்கள் அதிக நன்மைகள் அடைவாள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### தனுசு

தொழில்ஸ்தானத்தில் நிதானமாகவும், உண்மையாகவும் இருந்து செயற்படுவீர்கள். தவறுகளைக் கண்டிப்பீர்கள். பக்திமான்களுடன் பழகுவீர்கள். வாய்வுச் சாப்பாடுகளைத் தவிர்த்தால் நன்று. குடும்பத்தினருக்காக ஓடியாடித்திரிவீர்கள். வீடு, வாகன சுகம் கிடைக்கும், வயிறு, கைகால், தலை, நாரி போன்ற இடங்களில் வருத்தங்கள் வரும். கிருமித் தாக்கம் வரும். கவனமாக இருக்கவும். சட்டத்துறை, அரசியல் துறை, பலசரக்கு வியாபாரம் போன்றதுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு. நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள் :- வெள்ளி, சனி.

### மகரம்

சாஸ்திரம் பார்ப்பது ஏன் எமது வாழ்வு சாதகமாகுமா வளமாக்க முடியுமா என அறிந்து செயற்பட — உங்களுக்கு சாதகமாகச் சொல்லி பல மாற்றங்களைச் செய்து தருபவர்கள் உண்மையான சோதிடர்களல்லர். அவர்களால் பின்னர் உங்கள் வாழ்வில் வேதனைகள் வந்து கண்ணீர் விடுவீர்கள். தொழிஸ்தானத்தில் பலவித அபிப்பிராயக் கருத்து மாற்றங்கள்ஏற்படும்.ஆயினும் உங்களைப் பாதிக்காது. குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும்.நரம்புப் பிடிப்பு, வயிற்றுநோ, குடல் வருத்தங்கள் மூட்டு வலிகள் என்பன இருக்கும். குருத்துறை, நிர்வாகத் துறை, மருந்துத்துறை, சந்தை வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள் :- வியாழன். சனி.

### கும்பம்

ஒருவரின் வாழ்வு வளமாக அவர் எந்தவிதமான திட்டங்களையும் போட்டுச் செயற்படுத்தலாம். ஆனால் அது நேர்மை, உண்மையானவையாக இருப்பது மிக அவசியமாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளால் தொல்லைகள், சகோதரங்களுடன் வாக்குக் கலகங்கள் என்பன ஏற்படலாம். கீழ் நிலை உத்தியோகத்தர்களால் மனக்கஷ்டங்கள் ஏற்படல், கால்வீக்கம், மூட்டுவலி, தலைப்பாரம், காய்ச்சல் என்பன ஏற்படும். குருத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத் துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி.

### மீனம்

ஆட்சியை ஒருக்கால் மாற்றிப்பார்ப்போம் என மக்கள் விரும்பினாலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் சட்டதிட்டங்களைத் தமக்குச் சாதகமாக்கி திட்டமிடப்பார்க்க மாட்டார்களா என மக்கள் கேட்கிறார்கள். எனவே தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் புதிதாக உங்களுக்கு அதிகலாபங்கள் வரும் என எதிர்பார்க்க வேண்டாம். கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்படும். பிடிவாதம், பொருள் இழப்பு வாகனம், வைத்தியச் செலவுகள் அதிகரித்தல் என்பன ஏற்படும். தூரதேசப் பிரயாணங்களால் இழப்புக்கள் வரும். சளி பிடிக்கும். நரம்புச் சோர்வு வரலாம். பித்தரோகம் கால் வீக்கம் வரும். சட்டத்துறை மருந்துத்துறை, செய்தித்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- வியாழன், சனி

---

## பழுதடைந்தஉணவுப்பொருள் விற்பனை:

# வர்த்தகர்கள் நால்வருக்கு நீதிமன்றத்தில் அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 24

காலாவதியான மற்றும் சுகாதாரம் பேணப்படாத உணவுப் பொருள்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்த 4 வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றம் மொத்தம் 20 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டது.

உரும்பிராய் மற்றும் திருநெல்வேலிப் பகுதியில் திடீர்ப் பரிசோதனையில் ஈடுபட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 4 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவதை கண்டுபிடித்ததைத் தொடர்ந்து அவர்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட வர்த்தகர்களான நந்தகுமார் கோகுலன் (நீர்வேலி மேற்கு), அ. ஜெயரட்ணம் (உரும்பிராய் கிழக்கு), செ. சிவசுப்பிரமணியம் (உரும்பிராய் கிழக்கு), வல்லிபுரம் பஞ்சநாதன் (திருநெல்வேலி) ஆகிய நான்கு பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு நீதிவான் ஆர். ரி. விக்கினராஜா உத்தரவிட்டார்.

(ஐ-6-ரி)

## பிரிவுபசார வைபவம்

யாழ்ப்பாணம்,நவ 24

யாழ். மாவட்டத்தில் சமூக சேவை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி இளைப்பாறிய இரு உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார வைபவம் இன்று சனிக்கிழமை யாழ். வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது

எம். தர்மலிங்கம் (பருத்தித்துறை பிரதேச செயலகம்) திருமதி ஆர். கந்தப்பா (ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்) ஆகிய இரு உத்தியோகத்தர்களுக்கே பிரிவுபசாரம் அளிக்கப்படவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

(ஐ-173)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, நவ. 24

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில்கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு-:

அராலி பாரதி வி க. எதிர் ஏழாலை கண்ணகி வி, க.

அராலி எ. எல். வி. க. எதிர் மல்லாகம் ஸ்ரீ முருகன் வி க.

(க-86)

## ஆசிரியரின் சுயவிவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.24

சுயவிவரப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப்பெற்ற ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு சென்ற ஆசிரியர்கள் அனைவரையும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் சமுகமளிக்குமாறு அதிபர் த. கந்தையா கோரியுள்ளார்.

(ஐ-173)

# திருமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை காக்கும் முயற்சியில் வெகுஜன அமைப்பு

அடுத்தமாதம் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் 12ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தத்தமது கட்சியைப் பலப்படுத்தி, ஆசனங்களைக கைப்பற்றும் முனைப்பிலே சகல கட்சிகளும் மும்முரமான தேர்தல் பிரசாரத்தில் குதித்துள்ளன என்பது வெள்ளிடைமலை. அதற்கு திருகோணமலையும் விதிவிலக்கில்லை. கட்சியின் சின்னங்கள் பொறித்த பல்வேறு வர்ணங்களிலுமான போஸ்டர்கள் கண்ணைப்பறிக்கின்றன. அவ்வாறுதான் திருமலையில் அநாமதேய துண்டுப் பிரசுரங்களும் கலர்கலராக வெளிவந்தவண்ணம் உள்ளன.

## எஸ்.எஸ்.ஆர்.

இந்நிலையில் திருமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கில் 'வெகுஜன அபிவிருத்தி அமைப்பு' துணிந்து குரல் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

கடந்த காலங்களில் தமிழ் அரசியல்வாதிகளும், கட்சிகளும் செய்தவைபற்றி விமர்சிப்பதற்கு இது தருணமல்ல. அதனை மறந்து விடியலை மட்டும் கருத்திற்கொள்வோம் எனக்கூறும் அமைப்பு, தமிழர்களின் தலைநகரமாக விளங்கும் திருகோணமலையின் நிலைமைபற்றியும் கூறியுள்ளது.

தமிழ்த்தாயகம் திட்டமிட்ட குடியேற்றங்களால் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டிருக்கின்றார்கள். திருகோணமலை மாவட்டத்தின் சகல உயர் நிர்வாகபீடங்களையும் வேற்று இடங்களுக்கு மாற்றுவதற்கான சதியொன்று துளிர்விட்டிருக்கின்றது. கடந்த வருட தேர்தலில் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டதால் திருகோணமலைத் தமிழர்களுக்குச் சொந்தமான பூமியல்ல என்ற வாதம் வலுப்பெற்று வருகிறது. இந்நிலை நீடிக்குமானால் திருகோணமலைத் தமிழர்கள் அனைவரும் பேரினவாதிகளைச் சுற்றிவரும் இழிநிலை ஏற்படலாம் எனக்கூறப்படுகின்றது. இழந்த பிரதிநிதித்துவத்தை மீட்டு, பிரதேச அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டுமாயின் கடந்தகால கசப்பான அனுபவங்களை படிப்பினையாகக் கொள்ளவேண்டும் என்பது அவர்கள் கருத்து.

சென்ற தேர்தலில் பிரதிநிதித்துவம் பறிபோவதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

☆ தமிழ் மக்களின் மிகக் குறைந்த வாக்களிப்பு வீதம் (40%).

☆ அரசின் சதியாலும் ஒற்றுமையின்மையாலும் எண்ணிக்கையில் கூடிய தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டு, தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்தமை.

☆ பேரினவாதக் கட்சிகள் பல்வேறு ஆசை வார்த்தைகளையும், அற்ப சலுகைகளையும் வழங்கி, தமிழ் மக்களது வாக்குகளை அபகரித்தமை.

☆ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிக்க முடியாத சூழல்.

இத்தனை காரணங்களும் இந்த முறை நிகழக்கூடாது என்பதிலே பலரும் அக்கறைப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையாக நான்கு கட்சிகள் ஓரணியில் திரண்டு போட்டியிடுகின்றன. இதனைப் பலப்படுத்துவதே தமிழ் வாக்காளரின் தலையாயகடன். தமிழர் மீதான ஒடுக்குமுறையைத் தகர்தெறிவதற்கு 'உதயசூரியனை' பலப்படுத்துங்கள் என அந்த அமைப்பு மேலும் கேட்டிருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, காசைக் கொடுத்து சாதிக்கலாம் என ஒரு கட்சி கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறது. மக்களை ஏமாற்றி, அவர்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, வாக்குகளைப் பறித்தெடுப்பதற்கு மற்றும் பல கட்சிகள் முயல்கின்றன. இந்நிலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காக்க மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் எனக் கேட்பது வெற்றியீட்டித்தரும் என்பதில் ஐயமில்லை. ☆

## முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணக்கல்வி வலயப் பாடசாலைகளில் நடைபெற்ற முறைசாராக கல்விப் பாடநெறிகளுக்கான இறுதிப் பரீட்சை இன்றும், நாளையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகலரையும் தவறாது மேற்படி பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.(க-7)

## வாக்காளர் அட்டைகள் பொலீஸ் நிலையத்தில்

கொடிகாமம் தபால் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களின் வாக்காளர் அட்டைகளைத் தினமும் கொடிகாமம் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று பாதுகாப்பாக வைக்கவேண்டியநிலை, இங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தபால்நிலையத்திற்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படாததால் தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் ஊழியர்கள் வாக்காளர் அட்டைகளை பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லவேண்டியுள்ளது. (ஐ-117)

## எழுத்துப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.24

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு யாழ். இந்துசமயப் பேரவையினால் நடத்தப்படவுள்ள கவிமணி, கவிமாமணி விருதுகளுக்கான எழுத்துப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்-

அவை கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு நாளை காலை 9 மணிக்கு வருகை தருவதன் மூலம் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## நகரில் தெருக்கூத்து

யாழ்ப்பாணம்,நவ.24

ஈ.பி.டி.பி. அமைப்பு எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் முகமாக தெருக்கூத்துப் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் முன்னாள் எம்.பியுமான ந.மதனராசாவின் மேற்பார்வையில் தெருக்கூத்துக்கள் இடம்பெற்றுவருகின்றன.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் யாழ்.மத்திய பஸ்நிலையத்தில் அரைமணி நேர தெருக்கூத்து இடம்பெற்றது. (ஐ-173)


**யாழ்.வைத்திய நிலையம்**

வேம்படி, யாழ்ப்பாணம்.

☆ வெளிநோயாளர் பிரிவு ☆ உளநல மருத்துவம்
☆ நோயாளர் தங்குமிட வசதி ☆ மகப்பேற்று வைத்தியம்
☆ வைத்திய நிபுணர் சேவை ☆ சரும நோய் வைத்தியம்
☆ பொது வைத்தியம்
☆ மற்றும் சத்திர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் வைத்தியம், காது, மூக்கு, தொண்டைப் பிரிவு.

தொலைபேசி ~ 2495 (94826) - நிர்வாகி.



**நாவற்குழி வணிக கைத்தொழில் கழகம்**

நாளை (25-11-2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12. 30 மணிக்கு யாழ். ஸ்ரீதர் தியேட்டர், ஈ. பி. டி. பி. பணிமனையில் நாவற்குழி - தனங்களப்பு வரையுள்ள வணிக கைத்தொழிலாளர்கள் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு சம்பந்தமாக உரையாடுவதற்கு சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

இ.சிவானந்தன், *செயலாளர்.* துு.ஐயாத்துரை, *தலைவர்.*

நாவற்குழி வணிகர் கழகம். (94827)





**உரிமையை இழந்தோம்!**
**உடமையை இழந்தோம்!**
**உணர்வை இழக்கலாமா?**



மாபெருந்தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்

மாமனிதர் குமார் பொன்னம்பலம்

**யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!**

தமிழினத்தின் ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டவும், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்தவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.



இல. 1

திரு. அ.விநாயகமூர்த்தி



இல. 5

திரு. சீ.வி.கே.சிவஞானம்



இல. 8

திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம்

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த பொழுதிலும் தனது கொள்கையில் நின்று இம்மியும் பின்வாங்காது ~ அரசுக்கு அடிபணியாது ~ தனிமனிதனாக நின்று தமிழினத்துக்காகக் குரல் எழுப்பியவர் குமார் பொன்னம்பலம் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை முதன்முதலில் வற்புறுத்திய அரசியல் தலைவர் இவரே. சமாதானப் பேச்சு விடுதலைப் புலிகளுடன் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்பதை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசாரம் செய்துவந்தார். இதனால்தான் தமிழினப் பகைவர்களால் அவரின் உயிர் பறிக்கப்பட்டது. அவரின் துணிவு, திறமை, நேர்மையான அரசியல், தியாகம் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காட்டத் துணையாக இருந்தவை தன்னிகரற்ற தமிழர் தலைவர் ஜீ.ஜீயின் மைந்தன் என்ற பெருமையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் என்ற உரிமையுமே ஆகும். மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் ஒரே மைந்தன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார்) இத்தேர்தலில் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கவே உங்கள் முன் வேட்பாளராக நிற்கின்றார். மாமனிதர் குமாரின் பணியைத் தொடர்ந்து செய்யக்கூடிய துணிவு, திறமை, நேர்மை, இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படும் தன்மை ஆகியவை கடவுளால் அவரின் மைந்தனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வெற்றிடத்தை நிரப்ப அவரின் மைந்தனை ஆதரிப்போமாக.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக திரு.அ.விநாயகமூர்த்தி அவர்கள் அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்துக்குப் பக்க பலமாக நின்று பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழர்கள் தொடர்பாக வாதாடியதையும் விடுவித்ததையும் நீங்கள் அறிவீர்கள். நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின் ஆற்றிய சேவைகளையும், பேச்சுக்களையும் நீங்கள் அறிவீர்கள். தமிழர்களின் உரிமைக் குரலாக அவரது குரல் தனித்துவமாக ஒலித்தது. தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே என்பதை மற்றவர்களையும் ஏற்கச் செய்தவர் இவரே. முன்னாள் மாநகர சபை ஆணையாளரும், இந்நாள் யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவரும், உரிமைப் போராட்டங்கள் பலவற்றில் முன்னின்று உழைத்தவருமான திரு.சீ.வி.கே. சிவஞானம் சிறந்த செயல் வீரர்.

இவர்கள் மூவரையும் உங்கள் நல்வாழ்வுக்காக ஆதரியுங்கள். எனவே உதயசூரியனுக்கு நேரே புள்ளடியிட்டு இவர்களது இலக்கங்களான 1 5 8 ஆகியவற்றின் மேல் தனித்தனியே புள்ளடியிட்டுத் தமிழ்க் காங்கிரஸின் வெற்றியையும், கூட்டமைப்பின் வெற்றியையும், தமிழினத்தின் வெற்றியையும் தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள்.

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X | 1 | 5 | 8 |
|---|---|---|---|---|---|

**தமிழர் தாகம் சுதந்திர தாகம்.**

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி.**

(93948)

## முதலில் தெளிவடையுங்கள்! பின்னர் தெரிவு செய்யுங்கள்!!

### இந்து மறுமலர்ச்சி ஆதீனம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

அனைத்துத் தமிழ் மக்களும் இணைந்து ஒன்றுபட்ட பலத்தை உணர்த்த வாக்களிப்போம்.

- இவ்வாறு 'இந்து மறுமலர்ச்சி ஆதீனம்' விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக 'இந்து மறுமலர்ச்சி ஆதீனம் விடுக்கும் செய்தி' என்ற தலைப்பில் ஆதீன முதல்வர் திருமுருக அழகு ஜெகதீஸ்வர தேசிகர் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மக்களே! எதிர்வரும் 5ஆம் திகதி நீங்கள் வழங்கவிருக்கும் தீர்ப்பினை உலகமே கவனிக்கிறது என்பதை மறக்காதீர்கள். ஆகவே உங்கள் பொறுப்பினை உணர்ந்து நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

பல வகையான தேர்தல் கோஷங்களோடு பல கட்சிகள் உங்களிடம் வாக்குக் கேட்டு நிற்கின்றன. இக்கட்சிகளிடையேயான உங்கள் தெரிவு தெளிவானதாக இருக்க வேண்டும். உறுதியான ஒரு முடிவை அனைத்து தமிழ் மக்களும் இணைந்து எடுத்து உங்கள் பலத்தை உணர்த்துங்கள்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' அனைத்துத் தமிழரும் இணைவதும் எம் பலத்தை உணர்த்தி வாக்களிப்போம். இதற்காக தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த எமது ஆதீனத்தின் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் இனிவரும் நாள்களில் உங்களிடம் வருவார்கள். தெளிவடையுங்கள்; அதன்பின் தெரிவு செய்யுங்கள்.

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## மு. காங்கிரஸ் வேட்பாளர் ஆனந்தகுமார் தெரிவிப்பு:

# தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த யாரால் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்?

### இனவாதம் பேசுவோர் இதனை உணரட்டும்

யாழ்ப்பாணம்,நவ.24


இன்று உயிருடன் விளையாடும் ஆயுதப் போராட்டத்தை தமிழ் இளைஞர்கள் தாங்களாகவே முன்னெடுக்கவில்லை. அவ்வாறு செய்ய அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இனவாதம் பேசுவோர் இதனை உணர வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட வேட்பாளர் ஞா.ஆனந்தகுமார் பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

அதன் முழு விவரம் வருமாறு:-

எதிர்வரும் 5ஆம் திகதி இந்த நாட்டு மக்களின் தலைவிதியை பிரபாகரனிடம் ஒப்படைப்பதா இல்லையா என்பதனை மக்களே தீர்மானியுங்கள் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். பிரபாகரனிடம் நாட்டை ஒப்படைப்பதா இல்லையா என்பதல்ல எம்மிடம் உள்ள கேள்வி. பிரபாகரன் ஆயுதம் ஏந்தி போராடக் காரணம் என்ன? இந்த நிலையை யார் உருவாக்கினார்கள், இதற்கான தீர்வு என்ன என்பதே எம்முன் எழுந்துள்ள கேள்வியாகும். ஜனாதிபதி சந்திரிகா நினைத்தால் 94ஆம் ஆண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற ஆரம்ப கட்டத்திலேயே யுத்தத்திற்கு முடிவுகட்டி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் பதிலாக சமாதான மாயையை ஏற்படுத்தினாரே தவிர இதயசுத்தியுடன் இனப்பிரச்சினையை அணுகவில்லை. தவறை தம் பக்கம் வைத்துக்கொண்டு இன்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இனவாதம பேசுகின்றார். இது அரசியல் கோழைத்தனமாகும்.

இனவாதம் பேசுவதால் இன்று எவ்வித பயனும் இல்லை. கடந்த காலத்தில் அரசியல்வாதிகள் பேசிய



இனவாதத்தின் காரணமாகத்தான் இன்று நாடு சீரழிந்து போயுள்ளது. இதனை இன்று இனவாதம் பேசுபவர்கள் உணரவேண்டும். தமிழ் இளைஞர்கள் தாமாக விரும்பி இன்று உயிருடன் விளையாட ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களைக் கையில் எடுக்க, கடந்த கால அரசாங்கங்களினால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக நாடு பெரும் யுத்த நெருப்பில் எரிகின்றது. இதற்கு இன்று ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் எண்ணெய் வார்க்கின்றார்கள்.

இது தவிர்க்கப்பட வேண்டும். யுத்தத்திற்கு முடிவு காணப்பட வேண்டும். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில் எவ்விதத்திலும அபிவிருத்தி காணமுடியாது. நாடு அபிவிருத்தி அடைந்து தன்னிறைவு காண வேண்டுமானால் யுத்தம் நிறுததப்பட வேண்டும். சமாதான சூழல் ஏற்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இவையெல்லாம் நிறைவேற வேண்டுமானால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடததியே தீரவேண்டும். இதைவிடுத்து வெறுமனே இனவாதம் பேசிக் கொண்டிருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. யுத்தம் மேலும் நாட்டை சீரழிக்கவே செய்யும - என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ.தே.கட்சியினரின் தேர்தல் விஞ்ஞாபனமும் மகேஸ்வரனின் 'புளுகு மூடை'யும் ஒன்றுதானா?

### விளக்கம் கேட்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம்,நவ.24

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபட்டதா? ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் என்று கூறி அக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் ஒரு புளுகு மூடையை அவிழ்த்துவிட்டுள்ளாரே... அதற்கும் ஐ.தே.கவின் உண்மையான தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் என்ன சம்பந்தம்?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் வேட்பாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் தி.மகேஸ்வரன் அண்மையில் வெளியிட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஓர் அறிக்கையை விடுத்துள்ளார்.


அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

அரசியல் ரீதியாக என் மீதோ, எனது அணி மீதோ குற்றம், குறை கண்டுபிடிக்க முடியாத ஐ.தே.க. யாழ்.வேட்பாளர் மகேஸ்வரன் அவர்கள், பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் புதைத்த ஆயுதத்தை 513 ஆவது படையணியிடம் கையளித்ததாகவும், அது தவறான செயல் என்ற அடிப்படையிலும் பிரசாரம் செய்வதுடன், அதற்கு மாற்றீடாக நான் ஆயுதம் கேட்டதாகவும் கதை சொல்லி வருகின்றார்.

எனக்கோ, எனது அமைப்புக்கோ ஆயுதம் தேவை என்றால் 1990ஆம் ஆண்டு பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்தபொழுதே வாங்கியிருக்க முடியும். ஆனால் கொள்கை ரீதியாக நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், எனது அணி முழுமையான ஒரு ஜனநாயக அமைப்பாகவே செயற்பட்டு வருகின்றதென்பதை கடந்த 10 வருட அரசியலை அவதானிப்போர் உணரலாம். எனது தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் பிழை பிடிக்க முடியாதவர்கள் புதுக் கற்பனைக் கதைகளை நாளாந்தம் அவிழ்த்துவிட்டு வருகின்றனர்.

அரசியல் ஞானசூனியமான மகேஸ்வரனுக்கு கற்பனை வளங்கள் ஒன்றாகவே உள்ளன. ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் அடிக்கடி பேசுவதாகக் கூறுகின்றார். உண்மைதான். சந்திரிகா அரசைப் பதவியை விட்டு அகற்றுவது என்ற விடயத்தில் சேர்ந்து செயற்பட்டோம். அச்சமயம் அவரை அடிக்கடி சந்தித்தேன். வருங்காலத்திலும் கூட, யுத்தநிறுத்தம், பேச்சு போன்ற விடயங்கள் தொடர்பாக நான் ரணிலுடன் அடிக்கடி பேசும் சூழல் ஏற்படலாம். அதில் எந்தத் தவறுமிருப்பதாகத் தெரியவில்லை.

இது தமிழர் கூட்டமைப்புக்கு விநோதமான செயற்பாடல்ல என்பதை மகேஸ்வரன் புரிந்துகொள்வது கடினமாகத்தான் இருக்கும். கூட்டமைப்பின சட்டதிட்டத்தை பற்றி என்ன புரிந்துகொண்டு மகேஸ்வரன் பிதற்றுகின்றார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். இவ்வளவெல்லாம் பிதற்றும் மகேஸ்வரனுக்கு முனனுக்கும், பின்னுக்கும் இராணுவம், பொலீஸ்



பாதுகாப்பு இல்லாமல் கோயிலுக்கும் போகமுடியவில்லை. ஆனால் எந்தவித பாதுகாப்புமில்லாமல்தான் நாம் இங்கு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளோம் என்பதை அவர் புரிந்துகொண்டால் நல்லது.

மகேஸ்வரனின் கதைகளுக்கு பதில் சொல்வது அர்த்தமற்றதும், தேவை இல்லாததுமாகும். இருப்பினும், தொடர்ச்சியாகவே பொய் மூடைகளை அவிழ்த்துவிடுவதால் மக்களுக்கு உண்மைநிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும்.

மகேஸ்வரனிடம் சில கேள்விகள்:-

01. இருபத்தைந்து வருடகால இன விடுதலைப் போராட்டத்தில் உமது பங்களிப்பென்ன?

02. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக அல்லது தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை தொடர்பாக உங்களதும் உங்களது கட்சியினதும் நிலைப்பாடென்ன?

03. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசு விதித்துள்ள தடையை நீக்கமுடியாதென உங்கள் கட்சிப் பேச்சாளர் கொழும்பில் கூறினாரே. அதுபற்றி மக்களுக்கு நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

04. ஒற்றை ஆட்சிமுறைக்குள்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என உங்கள் கட்சித் தலைவர்கள் பேசுகின்றார்களே. அது தொடர்பாக உங்கள் விளக்கமென்ன?

05. கடந்த நாடாளுமன்றத்தில் நீர் அங்கத்தவராக இருந்தபொழுது யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து உம்மால் ஒரு முறை கூட வாக்களிக்க முடியவில்லை. ஏன்? நீரும் மறைமுகமாக யுத்தத்தை ஆதரிக்கின்றீர் என்பதுதானே அதன் பொருள்?

06. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் என ஓர் புளுகு மூடையை அவிழ்த்துவிட்டுள்ளீரே. இதற்கும் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் என்ன சம்பந்தம்? நீர் சொன்னதில் ஏதாவது ஒரு வரி ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உண்டா? அல்லது மாவட்டத்துக்கு மாவட்டம் ஐ.தே.க. வித்தியாசமான தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடுகின்றதா?

07. பருத்தித்துறை இறங்குதுறை தொழிலாளிகளுக்குக் கொடுபட வேண்டிய பணத்தில் நீரும், வேறு சில நிர்வாக முக்கியஸ்தர்களும் சேர்ந்து வர்த்தகம் செய்யவில்லையா? அப்பாவித் தொழிலாளிகளின் பணம் எத்தனை லட்சம் உங்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது?

08. யாழ்ப்பாண மக்களின் யுத்த அவலங்களுக்கு ஒத்தடம் கொடுக்க முயற்சிக்கின்றீரே, யுத்தநிறுத்தம் ஒன்றிற்கு உமது கட்சி தயாராக உள்ளதா? ஆம் என்றால் உங்கள் தலைமைப்பீடத்தை உடனடியாக ஓர் அறிக்கை விடுமாறு உம்மால் கோர முடியுமா?

09. வந்தவுடன் 45 நாளில் பாதை திறப்பு என்று முழங்குகின்றீரே, ஐ.

தேர்தல் களம்

தே.கட்சியோ அன்றி விடுதலைப் புலிகளோ இதற்கு சம்மதித்தார்களா? வன்னிப்பாதையல்ல - யாழ்ப்பாணத்தில் பாதைகள் மூடப்பட்டுள்ளனவே, முதலில் அதனைத் திறக்க முடியுமா என்று பாரும்.

இன்னும் பல கேள்விகள் உண்டு. அவை இப்போதைக்கு வேண்டாம். மேற்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம், இனப்பிரச்சினை தொடர்பான உங்கள் கட்சியின் நிலைப்பாட்டை தமிழ்மக்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் என்பதுடன், உங்கள் உறுதிமொழிகளைப் பற்றிய உண்மையான தாற்பரியத்தைப் பற்றியும் மக்கள் அறிந்து கொள்ளமுடியும்.

தமிழ்மக்களுக்கென வளர்ச்சி அடைந்த அரசியல் கலாசாரம் உண்டு. பணத்துக்கும் அற்ப சலுகைகளுக்கும் அவர்கள் என்றும் விலை போனவர்கள் அல்லர். உங்கள் அற்பத்தனமான தேர்தல் வாக்குறுதிகளும் அசிங்கத்தனமான பேச்சுக்களையும் மக்கள் முழுமையாகவே புரிந்துகொண்டுள்ளனர். நீங்கள் பொருள்களை விலைக்கு வாங்குவதுபோல், மக்களை விலைக்கு வாங்க முடியுமென நினைத்தால், தவறுவிடுகின்றீர்கள் என்றே அர்த்தம். எனவே தமிழ் மக்களின் முதிர்ந்த அரசியல் கலாசாரத்தை கவனத்தில் கொண்டு உமது அரசியலை நடத்தினால், சில வேளைகளில் உமக்கும் ஓர் அரசியல் எதிர்காலம் இருக்கலாம் - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## இருண்டயுகம் மாற ஐ.தே.கவுக்கு வாக்களியுங்கள்

# பொ.ஐ.மு. ஆட்சியில்தான் தமிழர்களுக்குப் பேரழிவு!

### வேட்பாளர் மகேஸ்வரன் கூறுகிறார்


சண்டிலிப்பாய்,நவ.24

இந்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்த காலத்திலும் பார்க்க சந்திரிகாவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்திலேயே தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகி வாட்டி வதைக்கப்பட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்த ஆட்சியை படுமோசமான - தமிழ் மக்களுக்கு எதிரான - ஆட்சி என்று கூறியுள்ளார். இத்தேர்தலில் அடுத்து ஆட்சி அமைக்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் இருண்ட வாழ்வை மலரச் செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் வேட்பாளர் முத்துக்குமாரு சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மகேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஈ.பி.டி.பி. கட்சியினர் தங்கள் சுயநலன்களுக்காகச் சிங்களப் பேரினவாதத்திற்கு முண்டு கொடுத்து வருகின்றார்கள். நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டபோது ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தம்முடனும் பேசியே தீர்வு காண வேண்டும் என்று கூறினார். இது பேச்சுக்களை ஆரம்பிப்பதில் பலத்த பின்னடைவை ஏற்படுத்தியது. அத்துடன் விடுதலைப் புலிகளின் போராட்டம் பற்றிக் கொச்சைப்படுத்தும் வகையில் உலக நாடுகளில் பிரசார நடவடிக்கைகளை ஈ.பி.டி.பியினர் மேற்



கொண்டனர். நான் நாடாளுமன்றத்தில் 27 தடவைகள் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் பற்றியும் அவர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்கள் பற்றியும் உரையாற்றினேன். புலிகளுடன் பேசித்தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றும் அவர்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றும் கூறினேன். பல இராணுவ வெற்றிகளைப் பெற்று தந்த விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்துவதற்கு - நாடாளுமன்றத்தில் இருக்கும் இடைஞ்சல்களை நீக்குவதற்கு - எம்மாலான உதவிகளைச் செய்வோம். ஐக்கிய தேசியக் கட்சியை சிங்களக் கட்சி என்று சிலர் கூறிப் பிரசாரம் செய்கின்றார்கள். இக்கட்சியில் மூன்று இனத்தவர்களும் இருக்கின்றனர். சகல மாவட்டங்களிலும் இக்கட்சிக்கு பிரதிநிதித்துவம் உள்ளது - என்று தெரிவித்தார். (ஐ-135)

# பாராட்டி மகிழ்கின்றோம்!



இந்து கலாசார அமைச்சினால்
**'கலா ஞான கேசரி'**
பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற
எமது நிறுவன பிரதம ஆலோசகர்
**செல்வி சரோஜா தம்பு**
(சங்கீத பூஷணம் - அண்ணாமலை ப. கழகம்,
வடமராட்சி வலய சங்கீத ஆசிரிய ஆலோசகர்)
அவர்களையும் கௌரவிக்கப்பெற்ற ஏனைய
மூத்த கலைஞர்களையும்
பாராட்டி மகிழ்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
பணியாளர், மாணவர்கள்.
தூரிகை நுண்கலை நிறுவனம்,
நெல்லியடி.

(94811)


# குடாநாட்டுக்கான 700 தபாற்பொதிகள் திருமலை தபாலகத்தில் தேக்கம்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் நோயாளர் சேவைக் கப்பலில் கடந்த சில வாரங்களாகக் குறைந்த எண்ணிக்கையான தபால் பொதிகளே எடுத்துவரப்பட்டுள்ளன. இதனால திருகோணமலை தபாலகத்தில் குடாநாட்டுக்கான 700 தபால் பொதிகள் தேங்கிக் கிடக்கின்றன.

கடந்தவாரங்களில் யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து மற்றும் அத்தியாவசியமான வேறு சில பொருள்கள் எடுத்துவரப்பட்டதால் ஏற்பட்ட இடப் பற்றாக்குறை காரணமாகவே தபாற்பொதிகள் குறைந்த எண்ணிக்கையில் எடுத்துவர நேரிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் காங்கேசன் துறைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 207 தபால் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட 50 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் -

குடாநாட்டில் பெறுமதிவாய்ந்த முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**P.பானுச்சந்திரன், S.புஸ்பராசா, K.குலேந்திரன்** (மாஸ்ரர்), **J.பாஸ்கரன் , V.சுகந்தன்**

கராத்தே மண' (8th DAN) அவர்களின் மாணவராகிய **Dr.K.KULENDRAN (NI.DAN BLACK BELT)** அவர்களால் முதலாவது கறுப்புப் பட்டிக்கான பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குக் கறுப்புப்பட்டி வழங்கப்பட்டது. இவர்களை கரவெட்டி **"பூடோக்காய்"** கராத்தேக் கழக மாணவர்கள் ஆகிய நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**Dr.K.KULENDRAN (NI.DAN BLACK BELT)**
BUDOKAI KARATE DO-MARTIAL ARTS ACADEMY
AFILIATED TO CHINES MARTIAL ARTS
FEREDATION.

(94737)



# வடமாநில சிரேஷ்ட ஆசிரியர் சங்கம்

**(முன்னைய தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கம்)**

## விசேட சந்திப்பு

*காலம்:* **நாளை (2001.11.25) ஞாயிறு காலை 7.30 மணி.**
*இடம்:* **ஶ்ரீதர் தியேட்டர் முன்றில்.**
*விடயம்:* 10.11.2001இல் நடைபெற்ற குறை நிவர்த்தி சேவையில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், கல்விச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது சங்கத்தின் கோரிக்கைகளான -

1. ஓய்வூதியத்துக்கு சேர்க்கப்பட்ட தோட்டப் பாடசாலைச் சேவையை பதவியுயர்வுக்குப் புள்ளி வழங்கக் கணித்தல்.
2. 50 வயது அடைந்து, 20 1/2 புள்ளிகளைப் பெற்ற ஆசிரியர்களுக்கு உடனடியாகத் தரம் ஒன்று பதவி உயர்வு வழங்கல்.
3. 1983 -1987 வன்செயல் நடைபெற்ற காலத்தில் ஆசிரியர்கள் பெற்ற சம்பளமற்ற விடுமுறைகளை விசேட லீவாகக் கணித்தல்.

ஆகியவற்றின் அமுலாக்கத்தை விரைவுபடுத்த கௌரவ வடக்கு - கிழக்கு மாகாணப் புனர்வாழ்வு அமைச்சரைச் சந்தித்தல்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

செயலாளர்,
வ.மா.சி.ஆ.சங்கம்,
144/6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C/19412)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ்.மாவட்டம்

### முஸ்லிம் காங்கிரஸ்



- தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயம்.
- விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர சமாதானம்.
- இடம்பெயர்ந்தோரின் அவலம் தீர்த்தல்.
- தமிழ் பேசும் மக்களின் கௌரவமான மீள் குடியேற்றம்; புதுவாழ்வு.

(93944)

முபீன்



புதிய அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி ஶ்ரீ.மு.காங்கிரஸ்



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ்.மாவட்டம்

### முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



**இனவாதத் தீயில்
கருகி எரிகிறது
இலங்கை.
இந்த தீச் சுவாலையில்
தமிழ் பேசும் மக்கள்
பொசுங்கி மடிகின்றனர்.
இந்த இழி நிலையை
தடுத்து நிறுத்தி,
நெஞ்சுயர்த்தி
நாடாளுமன்றத்தில்
குரல் கொடுக்க
உங்கள் வேட்பாளர் -
உங்கள் அன்பன் -
உங்கள் தொண்டன் -**





## ஞா.ஆனந்தகுமாரை
**நாடாளுமன்றம்
அனுப்பிவையுங்கள்.**

(C/19413)



# 6ஆம் மாத நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1978 - 04 - 28 | 2001 - 06 - 29 |



## அமரர் கந்தையா பௌதராசா *(மதி)*

திதி: பூர்வபக்க நவமி

**நம் குடும்பச் சோலைதனில் ஐவரில் ஒருவராய் மலர்ந்தவனே!
நம் குடும்ப ஒளிவிளக்கின் மதியென வளர்ந்தவனே!
தூரதேசம் சென்று துயர் களைவேனென்று - அன்று
வீராவேசத்துடன் சென்றவனே, உன் மதிமுகம் எங்கே?**

**ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் வகை வாழ்ந்தாய்!
இன்று சவூதிதனில் சாவுதான் அழைத்ததேனோ?
வந்துவிடு மீண்டும் எம்மிடையே மகனே, சோதரனே!
உந்தன் மதிமுகம் கண்டிட வந்துவிடு, வந்துவிடு!!**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இன்று (24-11-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*பாடசாலை வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.* (94804)

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்.

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சனசமூக நிலையம்**

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு
எமது நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிதியுதவி வழங்கியதற்காக



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து சமய கலாசார மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. **K.V.குகேந்திரன்** (ஜெகன்)
அவர்களையும்



வடமராட்சி E.P.D.P. அமைப்பாளர்
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்** (ரங்கன்)
அவர்களையும்

வல்வெட்டித்துறை E.P.D.P. இணைப்பாளர்
**ச.யோகராசா**
அவர்களையும்

பாராட்டி எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- நிர்வாகத்தினர்.

(C-19425)

## ராஜா யாழ்ப்பாணம்

கமல், மனீஷா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**

தினசரி:- 10.30,2,5 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்)
ஆசனங்களை முன்கூட்டியே
பதிவு செய்துகொள்ளவும்.
(C/19317)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந்த், லைலா
மற்றும் பலர் நடித்த
**கள்ளழகர்** (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-19383)

## நாகம்ஸ் சுன்னாகம்

ரஜனி, பிரபு, கௌதமி, சோ
நடித்த
**குரு சிஷ்யன்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:– 11.00, 3.00 (புதிய நேரம்)
(94823)

## கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'பெண்களும் சட்டத்தின் பங்கும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், சட்டத்தரணி பவானி சற்குணராஜா மற்றும் கொழும்பிலிருந்து வருகைதரவிருக்கும் சர்வ மதக்குழு அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ம-9)

## ஸ்ரீசெல்வா சினிமா யாழ்ப்பாணம்

தினசரி:- 10.30 மட்டும்
விஜயகாந்த் நடித்த
**தவசி**
2.30 மட்டும்
மாதவன் நடித்த
**பார்த்தாலே பரவசம்**
(C/19427)

## கைமாறப்பட்டுள்ளது

நாவலர் வீதி, தயா அச்சகத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த யாழ்.கனகரத்தினம் ம.ம.வித்தியாலய அதிபரின் மோட்டார் சயிக்கிளில் வைக்கப்பட்டிருந்த பிறீவ்கேஸை நேற்று தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து மேற்படி பாடசாலையில் ஒப்படைத்துதவவும்.

V.மாணிக்கம்
அதிபர்
*யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்.*
(94832)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. கலைமுதற்தேர்வு - 2000
2. கலைமாணி - பகுதி I - 2000
3. கலைமாணி - பகுதி II -2000
4. வணிக முதற்தேர்வு - 2000
5. வணிகமாணி - பகுதி I - 2000

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும பரீட்சார்த்திகள் யாழ. பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிதது விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொளளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 15/= இற்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையைச் சுயமுகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட நீள்தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிகு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.12.2001 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

*குறிப்பு:* மீள்பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைப்பெறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம.

*பதிவாளர்*
*23.11.2001*
(C/19418)

## வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

## 2002 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி - 07.12.2001, நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 10.12.2001, நண்பகல் 12.00மணிவரை .
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 10.12.2001, பிற்பகல் 2 மணி.
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை இவ்வலுவலக கேள்விப் பெட்டியிலும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.29, செட்டித்தெரு, நல்லூர்." என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கவேண்டும்.

| குத்தகை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் (பொ.சே.வரி நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை (பொ.சே.வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்:** | | | |
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2,000.00 | 1,48,500.00 |
| 02. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | 250.00 | 2,000.00 | 8,01,460.00 |
| **புத்தூர் உப அலுவலகம்:** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 1,000.00 | 88,220.00 |
| 02. வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 3,500.00 |
| 03. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 13,200.00 |
| 04. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 100.00 | 250.00 | 1,540.00 |
| 05. ஆவரங்கால் மீன் சந்தை | 50.00 | 100.00 | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்:** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100 | 250.00 | 3,500.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 1,200.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்:** | | | |
| 01. கோப்பாய் வடக்கு சந்தை | 100.00 | 250.00 | 7,865.00 |
| 02. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 37,512.00 |
| 03. இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2,475.00 |
| 04. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2,475.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்:** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2,000.00 | 1,03,950.00 |
| 02. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 30,470.00 |
| 03. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4,000.00 |
| 04. உரும்பிராய் மத்திய சந்தை | 200.00 | 1,000.00 | 63,360.00 |

*குறிப்பு:-* கேள்விப்பத்திரப்பணம், சித்திபெற்ற கேள்வித் தொகை என்பனவற்றிற்கு 12.5% பொருள்கள் சேவைக்கான வரி செலுத்துதல் வேண்டும்.

*வலி.கிழக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம், நீர்வேலி.*
*02.11.2001.*
(C/19417)

**பூ.குணசிங்கம்** ஜே.பி.யூ.எம்.
தவிசாளர்.

## கணனிப் பொதுப்பரீட்சை - 2001

### இலவச பயிற்சிக் கருத்தரங்கு

இலங்கையில் முதலாவது தமிழ் கணனிச் சஞ்சிகையான
**"கம்ப்யூட்டர் டுடே"**

தேசியரீதியில் நடத்தவுள்ள பெறுமதிமிக்க சான்றிதழுக்கான கணனிப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளதால் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களுடன் இரு நாள் இலவசக் கருத்தரங்கு STPயின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

**பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி: 30-11-2001**
**விவரங்கள், பாடத்திட்டம் மற்றும் பதிவுகளுக்கு**

**ம.அருள்குமரன்,**
(மாவட்டப் பரீட்சை இணைப்பாளர்)
யாழ்ப்பாணம்.

*STP* Computer World (Pvt) Ltd.,
54 A, Kantharmadam,
Jaffna.

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் தனித்தனியாக பரீட்சைக்கான வகுப்புகளும் கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பயிற்சி வகுப்புக்களுக்கான பதிவுகள் **01.12.2001** அன்று முதல் ஆரம்பமாகவுள்ளன. (C/19419)

## *யா/உ சன் இராமநாதன் ம.வி.*

## நிரந்தர ஆசிரியர்களுக்கு!

தங்கள் விவரங்களைப் பெற்று கணனிப் படிவத்தைப் பூர்த்திசெய்யத் தாங்கள் எங்கிருப்பினும் அதிபர் அவசரமாக அழைக்கிறார்.

நாள் :- 26.11.2001
நேரம் :- 9.30
இடம் :- யங்றோயல், நெல்லியடி.
(94831)

## மரண அறிவித்தல்


### முத்தையா சதானந்தன்

(இளைப்பாறிய ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை)

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சதானந்தன் நேற்று (23.11.2001) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
ச.யாதவானந்தன்
(மகன்)
(ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)

*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.*
(C-19424)



முதன்மை வேட்பாளர்

குடாநாட்டு மக்களின் விடிவுக்கான உரிமைக்குரல்
நாடாளுமன்றத்தில் ஒலித்து அவலங்களை நீக்க
வட்டு. மைந்தனை ஆதரியுங்கள்
**முத்துக்குமாரு சிவபாலன் (பேபி)**
**ஐக்கிய தேசியக் கட்சி**



| சின்னம் | யானை | X |
|---|---|---|
| இலக்கம் | 7 | X |

- வடலியூர் மக்கள்.

(93943)

# ஜனாதிபதி நினைத்தால் தேர்தலை எத்தனை தடவையும் நடத்தலாம்

## அனுரா பண்டாரநாயக்க சொல்கிறார்

கொழும்பு,நவ.24

சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. எனவே அவர் விரும்பினால் எத்தனை தடவையும் பொதுத் தேர்தல் நடத்துவார்.

- இவ்வாறு கூறுகின்றார் முன்னாள சபாநாயகர் அனுரா பண்டாரநாயகக.

எகலியகொடவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனுரா பண்டாரநாயக்க தனது உரையில் மேலும் கூறியதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகம் செய்தார்.

எனவே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை எந்தவேளையிலும் கலைப்பதற்கும், ஒத்திவைப்பதற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு பூரண அதிகாரம் உண்டு.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் மூலம் நாடாளுமன்றத்தில் சிறு மாற்றம் நடைபெறக்கூடும். ஆனால் ஜனாதிபதியின் அதிகாரங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படமாட்டாது.

அதேவேளை -

ஐ.தே.கட்சி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என்பது வெறும் பகற் கனவே.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# பொதுமக்கள் - ஈ.பி.டி.பி. பொத்துவிலில் கைகலப்பு

கொழும்பு,நவ.24

பொத்துவில் பகுதியில் உள்ள குண்டுமடுவில் ஈ.பி.டி.பியினருக்கும் அப்பகுதிப் பொதுமக்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வீட்டின் கதவில் அந்த வீட்டுக்காரரின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாது ஈ.பி.டி.பியினர் சுவரொட்டி ஒட்ட முனைந்தபோதே கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பியும் தற்போதைய ஈ.பி.டி.பி வேட்பாளருமான குணசேகரம் சங்கர், தகவல் கிடைத்து ஆயுதங்கள் சகிதம் அங்கு சென்றபோது அவருக்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது; அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது; அவருடைய கொடும்பாவியும எரிக்கப்பட்டது.

குண்டுமடு கிராமம் குணசேகரம் சங்கரின் சொந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### அளவெட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்துக்கு காவலாக வநத பொலீஸார் ஒருவரே வேட்டுக்களைத் தீர்தததாகத் தாங்கள் கருதுவதாகவும் -

சம்பவத்தை அடுத்து திரண்ட அப்பகுதி மக்களின் கல்வீச்சுக்கு பயந்து வந்த வாகனத்திலேயே அவாகள் ஏறித்தப்பிவிட்டனர் என்றும் -

தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களைக் கேட்டு அப்பகுதி இராணுவத்தினர் அங்கு விரைந்து வந்தனர் என்றும் -

தங்களது பகுதி இளைஞர்கள் இருவரை இச்சம்பவத்துக்குப் பின்னர் காணவில்லை என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

நேற்றிரவு 10 மணியளவில் 'ஹணடர்' வாகனத்தில் வந்த ஒரு கோஷடி, சுன்னாகத்தில் தமது வீட்டுக்கு முன்னாலும், அயல் பிரதேசத்திலும் கட்டப்பட்டிருந்த ஐ.தே.கட்சி பதாகைகளை அறுத்துச்சென்று, அட்டகாசம் புரிந்ததாக, ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தி.மா.செல்வராஜா (சித்தியார்) நேற்று நள்ளிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

### கைது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய மகாவித்தியாலயப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மகேஸ்வரன் மனோகரன் (வயது -20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கந்தசஷ்டி விரதத்தை ஒட்டி கடந்த 20ஆம் திகதி வாகரையில் உள்ள தனது உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தார்.

நேற்றுமுன்தினம் தனது நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் வாழைச்சேனை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த சமயம், மயிலங்கரச்சிப் பொலீஸ் நிலையத்தில் இருவரும் வழி மறிக்கப்பட்டனர்.

பொலீஸார் மனோகரனை மறித்து வைத்துக்கொண்டு அவரது நண்பரைப் போகும்படி பணித்தனர் என்றும் -

பின்னர் நேற்று மனோகரன் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-ம-7)

### கூட்டணி.....

(முதல்ாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிடுகின்றார் எனறு தெரிவித்து, அத்தவறு காரணமாக கூட்டணியின் வேட்பாளர் பட்டியலையே நிராகரிக்க வேண்டும் என்று இந்த மனுவில் கோரப்பட்டி ருந்தது.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த காசிலிங்கம் விக்னேஸ்வரன், ஸ்டீபன் ஆகிய இருவர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். (உ)

### தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யர், ஆணைக்குழுத் தலைவர் ரொமானோ ஆகியோருக்கு அவர் இக்கோரிக்கை அடங்கிய கடிதங்களை அனுப்பியிருக்கிறார்.

"கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் மூன்று தேர்தல்களைச் சந்தித்தோம். ஒவ்வொரு தேர்தலிலும், அதற்கு முந்திய தேர்தலில் கண்டதைவிடக் கூடுதலான வன்முறைகளே இடம்பெற்றன. இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்கும் சக்தி உங்களிடம் உண்டு'' - இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க அம்மூன்று உலகத் தலைவர்களுக்கும் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்.

வன்முறைகளைத் தூண்டுவதற்காக, அவர் ஆளுங்கட்சி மீது கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்றுவரும் தேர்தல் பிரசாரங்களின்போது நிகழ்ந்த வன்முறைகளில் 18 பேர் கொல்லப்பட்டனர்; 178 பேர் காயமடைந்தனர்.

வன்முறைகளுக்காக ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றின் மீது மற்றொன்று குற்றஞ்சுமத்தி வருவது தெரிந்ததே.

### பிரதமரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் துப்பாக்கியே இத்திட்டத்துக்கும் பயன்படுத்தப்படவிருக்கின்றது'' - என்று திஸநாயக்கா கூறுகிறார்.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இது குறித்து விவரித்தார்.

இக்கருவி பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிராக நீட்டப்படவுள்ளது. 90 வீதம் பிரதமருக்கு எதிராகவே அது உள்ளது. இதன்மூலம் அனுதாப அலையை ஏற்படுத்தி தேர்தலில் வெற்றிபெறும் திட்டத்தை அது கொண்டுள்ளது.

கடற்படைக்குச் சொந்தமான 'சினைப்பர்' துப்பாக்கி காணாமற்போனது தொடர்பாக கடற்படைத் தளபதியிடம் கேட்டேன்.

"99ஆம் ஆண்டு ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற தாக்குதலில் சினைப்பர் ரக சுடுகலன் காணாமறபோனது. இது சம்பந்தமாக விசாரணை நடத்தினோம். இந்தச் சுடுகலன் காணாமற்போனதாக முறைப்பாடு செய்த கடற்படைச் சிப்பாயை பதவி விலக்கினோம்." - என்று கடற்படைத் தளபதி சொன்னார்.

பதவி விலக்கப்பட்ட அந்தக் கடறபடைச் சிப்பாய், தற்சமயம் அமைச்சர் ஒருவருடன் செயற்படும் சட்டத்தரணியிடம் பணிபுரிகின்றார்.

- இப்படி திஸநாயக்கா தெரிவித்தார். (உ)

ஆனமடுவவில் படுகொலை:

# ஐ.தே.க. வேட்பாளர் மீண்டும் கைதானார்!

கொழும்பு,நவ.24

ஆனமடுவ பகுதியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் இருவர் கடந்த 6ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக -

ஐ.தே.கட்சியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் பாலித ரங்கே பண்டார நேற்று மீண்டும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

அழைப்பாணை கொண்டுசென்ற நீதிமன்ற உத்தியோகத்தரைத் தாக்கியமை மற்றும் ஆனமடுவ பொலீஸ் நிலையத்தில் அதிகாரிகள் சிலரைப் பலவந்தமாகத் தடுத்து வைத்திருந்தமைக்காக இவரைத் தாம் கைது செய்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

பாலித ரங்கே பண்டார புத்தளம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்று மாலை ஆஜர் செய்யப்பட்டபோது, நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் பொலீஸ் பொறுப்பதிகாரியான பாலித ரங்கே பண்டார மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பாக கடந்தவாரமும் கைது செய்யப்பட்டு, விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(உ 4-7)

### ஐ.தே.க. ஆட்சி அமைக்கும்; 'பினான்ஷல் டைம்ஸ்' கூறுகிறது

பொதுத்தேர்தலில் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. - இவ்வாறு பிரிட்டனின் 'பினான்ஷயல் டைம்ஸ்' பத்திரிகை நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கிறது.

சர்வதேச பொருளாதார சந்தைப் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி துஷ்யந்தி விஜேசிங்க அந்தப் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

### யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் சிலர், விரிவுரைகளைப் புறக்கணித்துவிட்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் -

அவ்வாறு செய்யத் தவறுபவர்களின் பெயர் விவரங்கள் சேகரிக்கப்பட்டு புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாக அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் - அந்த மாணவர்கள் தெரிவித்ததாக ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி, எவரும் தமது சுயவிருப்பின்பேரில் எந்தக் கட்சியையும் ஆதரித்துப் பிரசாரம் செய்வது அவரவருக்குரிய ஜனநாயக உரிமை. எனினும் மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் சுயவிருப்பமில்லாமல் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடச் செய்வது ஜனநாயக உரிமை மீறல் ஆகும் என்று தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி., இவ்விடயத்தை, அமைச்சர் டக்ளஸ் தேர்தல் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளது. (உ)

### கருத்தரங்கு

யாழ். நகர்மைய றோட்றரக்ட் கழகம் ஏற்பாடு செய்துள்ள ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு இன்றும்,நாளையும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-7)

### கருத்துக் கணிப்புக் குறித்து விளக்கம்

"நாளாந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை விட நிரந்தர சமாதானம் ஏற்படுவதையே 99 வீத யாழ் மக்கள் விரும்புகின்றனர்; கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு'' - என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் கடைசிப் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக அந்தக் கருத்துக் கணிப்பில் ஈடுபட்டுள்ள மேர்வின் மகேசன் தமது நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

"இலங்கையில் பொதுத் தேர்தலும் இனப்பிரச்சினையும் - ஒரு கருத்துக் கணிப்பு'' என்ற தலைப்பிலான கருத்துக் கணிப்பினை மேற்கொள்ளும முயற்சியில் நானும் ஈடுபட்டுள்ளது உண்மை எனினும் ஆக்கருத்துக் கணிப்பு இன்னமும் முற்றுப்பெறவில்லை; இறுதி அறிக்கை இன்னமும் தயாரிக்கப்படவில்லை. இக்கருத்துக் கணிப்புத் தொடர்பாக எந்தவித அபிப்பிராயத்தையும் - பிரசுரத்திற்கென - நான் தெரிவிக்கவில்லை.

- இப்படி மேர்வின் மகேசன் தெரிவித்திருக்கிறார். (உ)

### இரண்டாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளைத் தொடர்ந்தனர். நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன் மைதானத்தில் இருந்து ஒவ்வொரு பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒவ்வொரு பகுதிகளுக்கும் பிரிந்து சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரசார நடவடிக்கைகளின்போது தாம் இதுவரை கலந்துரையாடிய மக்களில் 85 வீதத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் -

நாட்டின் தீய சக்திகளை இனங்கண்டு எதிர்வரும் தேர்தலில் அவர்களைப் புறந்தள்ளுவதில் பெரும்பாலான மக்கள் உறுதியுடன் இருக்கிறார்கள் எனவும் - மாணவர் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரசார நடவடிக்கைகள் அடுத்த சில தினங்களுக்குத் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.(ம-4)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
தவசி
பார்த்தாலே பரவசம்
பிரதிகள் உடன் பெறலாம்.
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(C/19423)

விற்பனைக்கு
புதிய மொடல் டிஸ்க் அன்ரனாவுக்கு உரிய டிஜிட்டல், அனலொக், பொய்சினர், றிசீவர் EURO STAR L.N.B.F. விற்பனைக்கு உண்டு.
லலிதா ஜுவல்லறி,
இல. 213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 2863
(94807)

G.C.E. (O/L) 2001
இலங்கையின் பிரபல
முன்னணி விஞ்ஞான ஆசிரியர்
GRAPHS குமரன்
அவர்கள்
யாழ். ★ ஆசிரியர்கள்
★ மாணவர்கள்
நலன்கருதி
வெளியிட்டுள்ள நூல்கள்
✪ தலைமுறையுரிமை
✪ கூர்ப்பு
சகல முன்னணிக் கல்வி
நிலையங்களிலும் பெறலாம்
(C-19128)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
தவசி பார்த்தாலே பரவசம்
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியோ விஷன்
யாழ்ப்பாணம். (C/19422)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
தவசி
பார்த்தாலே பரவசம்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(94833)

சிந்து திரையரங்கு
உரும்பிராய் சந்தி
புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்
நடித்த
தவசி
(10.30 மணி காட்சி மட்டும்)
மாதவன், ஸ்நேகா, சிம்ரன்
நடித்த
பார்த்தாலே பரவசம்
(3.30 மணி காட்சி)
(C/19430)


உண்மையான சுதந்திரமும், சகோதரத்துவமும்,
சமாதானமும் மலர மீன் சின்னத்துக்கு
வாக்களியுங்கள்
தம்பிராஜா சுபத்திரன்
(றொபேட்)
சுயேச்சைக்குழு
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
(93950)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.